# குமுறும் நெஞ்சம்

முகம் இதழில் வெளிவந்த சமூகப் பிரச்சினைகளைப் பற்றிய பொறிபறக்கும் 31 கட்டுரைகளின் தொகுப்பு இந்நூல். சில பொறிகள் :

# வக்கத்தவனுக்குத் தமிழ் வாத்தியார் வேலையா?

# வேதமும் விஞ்ஞானமும் இணையுமா?

# உச்சரிப்புப் பிழை நாகரிகமா?

# இந்தி சவாரி ஆபத்தானது.

# என்று தணியும் இந்தக் கிரிக்கெட் மோகம்?

# கொரோனாவை விடக் கொடிய நோய்.


# சேர நாட்டில் விபத்திற்குள்ளான தமிழ்.

# மரணப்படுக்கையில் அச்சு ஊடகங்கள்.

# புதுப்பிக்கப்படுமா தமிழ் இலக்கணம்?

# மருத்துவராகும் வெறி சரியா?

# நாடெங்கும் நாய்த் தொல்லை.




**விலை ₹ 250**

அஞ்சல் இலவசம்

நூலைப் பெற: இ.ஜே.சுந்தர்

**Gpay** - 98410 68832

**வங்கி விவரம்:**
**A/c Name:** E. J. Sundar
**A/c No:** 427940665
**Bank:** Indian Bank
**IFSC:** IDIB000A095



# மே திருநாள் தொழிலாளர் வாழ்க!

உழைப்பவரே உயர்ந்திடுவர் என்னும் கொள்கை
உன்னதமாய் ஓங்கியதே நாட்டில் இன்று!
தழைக்கின்ற தொழிலைத்தாம் செய்து நாளும்
தன்னிகரில் தொழிலாளர் உயர்வு கொண்டார்!
விழைகின்ற தொழிலைத்தாம் செய்வோம் என்று
வீம்பாகக் காலத்தைக் கழிக்கா வண்ணம்
அழைக்கின்ற பணிகளிலே ஆர்வம் கொண்டு
அளவில்லா உழைப்பாலே உயர்ந்தார் மக்கள்!

நாட்டுநலம் கருதிகாலம் உழைத்த நல்லார்
நற்புகழும் பெற்றதற்குக் காந்தி சான்று!
ஈட்டுகின்ற பொருளெல்லாம் சேர்த்து ஈயும்
இன்செல்வர் நற்பணிகள் நிறைய சான்று!
பாட்டோடு உழைத்தோரும் உயர்வு பெற்றார்
பண்புகொண்டு பணிசெய்தார் உயர்ந்தோர் ஆனார்!
ஏட்டெழுதி உழைத்தோரும் உயர்வு பெற்று
எண்ணில்லாப் புகழ்பெற்றார் ஆக்கம் பெற்றார்!

அழைப்புமணி கேட்டவுடன் ஆங்கு சென்று
அன்னவர்க்குப் பணிசெய்யும் பணியாள் வாழ்க!
குழைகின்ற குள்ளநரிக் கூட்டம் தன்னைக்
கூடசேர்க்கா தொழிலாளர் கூட்டம் வாழ்க!
நுழையாத இடங்களிலும் நுழைந்து சென்று
நுட்பமுடன் பணியாற்றும் பாங்கோர் வாழ்க!
மழைபோல பிறருக்காய் உழைக்கும் மக்கள்
மண்ணுலகில் நலம்பெற்று நீடு வாழ்க!

- **ம. மயில் இளந்திரையன்**, கோவை
94430 81276

# சோம்பலின்றி உழைப்போம்!

**- பா. தமிழ்வேலி,** வேலூர்

மண்மேட்டைத் திருத்தியிங்கு வயல்க ளாக்கி
மணிமணியாய்ப் பயிர்வளர்த்து நாட்டுக் காக்கி,
கண்ணிரண்டை நாள்தோறும் இமைபோல் காக்கும்
கடமைகளைத் தவறாது செய்து வாழ்வோம்!
உண்மையுடன் உலகத்தில் உழைத்து நம்மின்
உறுபசியின் வாட்டத்தை உழைப்பால் போக்கி
வண்ணமுடன் காணுகின்ற வளமார் வாழ்வின்
வகையுணர்ந்து வாழ்வாங்கு வாழச் செய்வோம்!

ஆலைகளிலே இயந்திரங்கள் இயக்கி நாளும்
ஆயிரமாய்ப் பேரிடர்கள் தாங்கித் தாங்கி
காலைவளர் கதிர்போலே கடமை ஆற்றும்
கடுமுழைப்பு உழைப்பாளி உயர வேண்டும்!
வேலையிலாத் திண்டாட்டம் முழுதும் நீங்கி
வெற்றிகளைத் தொழிலாளர் துய்க்க வேண்டும்!
சோலைமலர் தேனருந்தும் வண்டு போல
சோம்பலின்றி உழைப்போரே வெற்றி யாளர்!

**கல்லை உடைக்கும்**
**கடுந்தொழி லாளியிடம்**
**கையிலே காசுமில்லை!**
**கொடுக்க யாருமில்லை!**

**கூலியைக் கேட்டால்**
**வேலையு மில்லை!**
**கூடி நின்றால்**
**ஊதிய மில்லை!**

**அதானி அம்பானி**
**கையிலே பலகோடி!**
**குப்பனுக்கும் சுப்பனுக்கும்**
**கையிலே கலவோடு!**

**சமதர்மம் பேசுகிற**
**நமது நாட்டில்**
**முதலாளியிடம் பலகோடி**
**தொழிலாளிக்குக் கோவணம்!**

**- பு.சு. ஆறுமுகம்,**
அத்திமாஞ்சேரி
94453 36065



# நீடூழி வாழ்க!



**க**விக்கொண்டல் மா. செங்குட்டுவனின் மகன் திரு. மா.செ. மதிவாணன் - திருமதி பார்வதி இணையரின் மணிவிழா 06.04.2024 அன்று சென்னை அன்னலட்சுமி உணவகத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

சுருக்கமான சுற்றமும் நட்பும் உறவும் பங்கேற்ற இவ்விழாவை மணிவிழா இணையரின் மகள் டாக்டர் ஓவியாள் - மருமகன் டாக்டர் மாணிக்கவாசகன் இணையர் ஏற்பாடு செய்திருந்தனர்.

மணிவிழா கண்ட திரு. மதிவாணன் - திருமதி பார்வதி இணையர் எல்லா வளமும் நலமும் பெற்று நீடு வாழ வாழ்த்தி மகிழ்கிறோம்.

# ஓர் அன்னையின் ஆவல்!

(அந்தாதி வெண்பா)

முல்லை அரும்பி முழுநிலாப் பூத்ததுபோல்
எல்லை கடந்திட்ட ஏகாந்தம் – மெல்லிதழ்
கூடி விரியக் குமிழ்ச்சிரிப்பென் நெஞ்செல்லாம்
நாடித் தெறிக்குதம்மா பார்!

பார்மகளே உன்றன் பணிமொழி வாலெயிறு
தேர்ந்த இசைகூட்டித் தென்றலென – ஊர்ந்தூர்ந்தென்
உள்ளமெலாம் ஊடாடி ஓர்மை மறக்கடிக்க
வெள்ளமென வந்ததடி வென்று!

வென்றுவக்க என்றன் வெறும்வாழ்க்கை வீறுபெற
கன்றென வந்த கனிமொழியே – இன்றுநீ
என்அன்னை ஆனாய் எழில்மாடப் பூங்குயிலே
பொன்னாய்ப் பொலிகின்றாய் பூத்து!

பூத்துக் குலுங்கிப் பொழிலாய் வளர்ந்தோங்கி,
காத்துக் கிடக்குமிந்தக் காருலகை – வார்த்தெடுப்பாய்
வள்ளல் பசுவாகி வண்டமிழ்ப் பேர்பாடித்
தெள்ளமுத வார்ப்படமாய்த் தேர்ந்து!

தேர்ந்து தெளிந்தார்ந்த சித்தாந்தக் கூடலெனக்
கூர்ந்த நெறிமுறைகள் கூட்டுவித்துச் – சேர்ந்தொன்றாய்
அன்னைத் தமிழ்நாடே அற்றைப் பெருமையொடு
பன்னிப் படர்ந்திடவே பாடு!

பாடு குயிலேநீ பைந்தமிழர் பண்பாட்டின்
நீடு புகழை நிமிர்த்தெடுக்க – பீடுறவே
நான் நீ அகன்றே நாமென்றே நட்பொருங்க
வான்போல் வளைத்தணைப்பாய் வந்து!

- **பூவரசி மறைமலை**, கோவை
81444 15956



**த**ஞ்சை மாவட்டம், குமணன்துறையைச் சேர்ந்த ஆசிரியை திருமதி சாந்தா பாலகிருஷ்ணன் அவர்கள் முனைவர் இளமாறன் அவர்களின் கவிதைகளை ஆய்வு செய்திருக்கிறார். அவருடைய ஆய்வுக்கட்டுரை இந்த இதழ் முதல் தொடராக வெளிவரும். - ஆர்.

# இளமாறன் கவிதைகள் ஒரு பார்வை!



**- திருமதி சாந்தா பாலகிருஷ்ணன்**

**க**விஞர் இளமாறனின் 'விடியல் தேடும் மலர்கள்', 'சுடர் விழிகள்', 'பதிவுகள்' ஆகிய கவிதை நூல்களையும் 'பூங்குழலி' என்னும் காப்பியத்தையும் படிக்கும் வாய்ப்பு பெற்றேன். முகம் இதழில் வெளியான திருமதி கவிஞர் ஜெயந்தி ஆனந்தன் அவர்களின் ஆய்வுக் கட்டுரையில் கவிஞரின் 'விடியல் தேடும் மலர்கள்', 'சுடர் விழிகள்' ஆகிய இரண்டு நூல்களிலும் உள்ள பெரும்பாலான கவிதைகள் இடம்பெற்றிருந்தன.

ஆகவே, மேற்கண்ட இரு நூல்களுடன், 'பதிவுகள்', 'பூங்குழலி' ஆகிய இரு நூல்களில் உள்ள கவிதைகளைப் பற்றி என்னுடைய கருத்தைப் பதிவு செய்யலாம் என்று நினைக்கிறேன்.

தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட மக்களுக்கு, விழிப் புணர்வைத் தூண்டும் வகையில் அமைந்த அத்துணைக் கவிதைகளும், தமிழ் மக்களிடம் சென்றடைந்தால் அவர்கள் அதைப் படித்துப் பார்த்து, தங்களுடைய கடமைகளையும் உரிமைகளையும் பற்றிய உண்மையை உணர்வார்கள். கவிதைகள் படிப்பவர்களின் பார்வையைப் பொருத்துதான் அவற்றின் சுவை அறியப்படுகிறது. நான் என்னுடைய பார்வையில் என் மனத்தில் தோன்றிய கருத்துகளை வெளிப்படுத்தியுள்ளேன்; வாசகர்கள் வரவேற்பார்கள் என்ற நம்பிக்கையுடன்.

## முனைவர் இளமாறன் கவிதைகள் ஒரு பார்வை!

"எச்சபை பொதுவென இயம்பினர் அறிஞர்கள்
அச்சபை இடங்கொளும் அருட்பெருஞ் சோதி!"

- அருட்பெருஞ்சோதி அகவல் 99

**பொருள்:** எவ்விடத்தில் எல்லா உயிர்களுக்கும், சாதி, சமய, மதம் என்ற வேறுபாடின்றிப் பொதுவாக விளங்குகிறதோ, எவ்விடத்தில் எவ்வுயிரும் சமமாக மதிக்கப்படுகின்றதோ, அவ்விடத்தில் தயவு நிறைந்த அருட்பெருஞ்சோதி ஆண்டவர் இடங்கொண்டிருக்கிறார்.

உலகின் மூத்த மொழியாகிய சீரிளமை குன்றாத செம்மொழியாக அறிவியல் வளர்ச்சிக்கேற்ப அன்றாடம் தன்னைப் புதுப்பித்துக்கொள்ளும் புகழ் மொழியாக விளங்கும் தமிழ் மொழியின் வளர்ச்சிக்குப் பாடுபட்ட தமிழ்ச் சான்றோர் பலர் தமிழ்நாட்டில் வாழ்ந்திருக்கின்றனர். அவ்வழித் தோன்றலிலிருந்து விளைந்த பயிராக திரு. இளமாறன் காணப்படுகின்றார்.

நேர்மை, நாணயம், துணிவு இவைகளைக் கடைப்பிடித்து எதற்கும் சமரசம் கொள்ளாமல், தன்னலம் சிறிதுமின்றிப் பொதுநலமே குறிக்கோளாகக் கொண்டு தன்னுடைய கவிதைகளைப் படைத்துள்ளார்.

ஆங்கிலேயர் ஆட்சியிலிருந்து விடுதலை பெற்ற தமிழ்நாடு, இன்றுவரை அன்னிய மொழியினர் ஆட்சியிலிருந்து விடுதலை பெறவில்லை. புரட்சிதான் விடுதலைக்கு ஒரே வழி. புரட்சி என்றால் முதலில் தொடங்குவது எழுத்துப் புரட்சி. பிறகுதான் மற்றவை.

**எதிரி ஆயுதம் தாங்காதவரை விமர்சனம் என்பதே ஆயுதம்
அவன் ஆயுதம் ஏந்திவிட்டால் ஆயுதம் என்பதே விமர்சனம்**

என்று காரல் மார்க்ஸ் கூறியுள்ளது போல, இளமாறன் அவர்களும் தமிழ் மொழியும் தமிழ் மக்களும் மீண்டு எழுவதற்கான எழுத்துப் புரட்சியையே தன் கவிதைகளில் எம்டன் குண்டாக வெடிக்கச் செய்துள்ளார்.

பதிவுகள் - என்ற அவருடைய கவிதைத் தொகுப்பைப் படிக்கும்போது, அதன் கருப்பொருள் தீக்கனலில் கற்பூரமாய் கரைந்து விடுகிறது மனது. அவருடைய கவிதைகளில் பிரெஞ்சுப் புரட்சிக்கு வித்திட்ட வால்டேர் மற்றும் ரூஸோ முகங்கள் தென்படுகின்றன. கொடுத்திருக்கும் சொல்வீச்சில் ஜெர்மனியின் காரல் மார்க்ஸ் சிந்தனைகள் சிறகடித்துப் பறக்கின்றன.

கவிதை எதைப் பேசவேண்டும் என்று கவிச்சக்கரவர்த்தி கம்பர், தனது இராமாயணத்தில்,

**புவியினுக்கு அணிஆய், ஆன்ற**
**பொருள்தந்து, புலத்திற்று ஆகி**
**அவிஅகத் துறைகள் தாங்கி**
**ஐந்திணை நெறிய ளாவி**
**சவிஉறத் தெளிந்து, தண்ணென்**
**ஒழுக்கமும் தழுவி, சான்றோர்**
**கவி..... ...... .... .....**
**..... ...... .... .....** **-சூர்ப்பணகைப் படலம் 2732**

என்று, அவர் வாழ்ந்த காலத்திற்கேற்றாற் போல், கவிதையின் தன்மையினை மென்மையாகக் குறிப்பிடுகிறார்.

ஆனால் இளமாறன் அவர்கள்,

"மாற்றத்தை ஏற்றுக்கொள்ள மனஉறுதி வேண்டும்
மாற்றம் ஒன்றே மாறாதது"

என்று காரல் மார்க்ஸ் கூறியதன் எதிரொலியாய் -

**காலத்தின் எதிரொலியே கவிதை; தோன்றும்**
**கருத்தெல்லாம் சமுதாய வெளிப்பா டாகும்!**
**தாளங்கள் இராகத்திற் கேற்ப மாறும்**
**தன்சூழல் எதிரொலிப்பால் கவிதை மாறும்!**
**கூளங்கள் போலிருக்கும் மனித வாழ்வோ**
**குறைகளையாப் பழஞ்சுமையால் அழுந்தும் போது**
**நாளங்கள் முறுக்கேறாக் கவிதை தந்தால்**
**நானுமோர் சமுதாயத் துரோகி ஆவேன்!**

**எனவேதான் என்கவியில் அழகு ணர்ச்சி**
**எதிர்பாரா முத்தம்போல் கிடைக்கச் செய்வேன்!**
**தினந்தோறும் சமுதாயச் சாக்க டைக்குள்**
**திணறுகின்ற மனிதகுலம் மீள்வ தற்கும்**
**தனதுநிலை உணராமல் வாழ்க்கை யோரம்**
**தத்தளிப்போர் தெளிவுபெற வைப்ப தற்கும்**
**கனலாகி என்கவிதை கருத்தை வீசும்**
**காலத்தின் குரலாகி நாளை பேசும்!**

**- சுடர்விழிகள், காலத்தின் குரல்**

என்று பதிவு செய்ததன் தொடர்ச்சியாகவே 'பதிவுகள்' என்ற கவிதைத் தொகுப்பின் என்னுரையில் "என்னுடைய கவிதைகளில் கற்பனை, கவித்துவம், அழகுணர்ச்சி போன்றவை இல்லாமல் இருக்கலாம். அதைப்பற்றி நான் கவலைப்படவில்லை. என்னுடைய கவலைகள் நூலினுள் இருக்கின்றன" என்று குறிப்பிடுகின்றார். நூல் என்பது இங்கே தமிழ் மற்றும் தமிழ்ச் சமுதாயம் பற்றிய சிந்தனையாகும்.

> 'ஒருவன் தனக்காக, தன்வாழ்க்கைக்காக உழைக்கும்போது
> மனிதன் ஆகிறான். ஒரு சமுதாயத்திற்காக, மக்களுக்காக
> வாழும்போதுதான் உண்மையான மனிதன் ஆகிறான்'

என்று காரல் மார்க்ஸ் கூற்றை மெய்ப்பிக்கும் வகையில் கவிஞர் அவர்களின் குறிக்கோள்கள் அவருடைய கவிதைகளில் ஒளிர்கின்றன.

**தமிழ்:-**

தமிழ் என்ற சொல்லுக்கு அருட்பிரகாச வள்ளலார் அவர்கள் மூன்று பக்க அளவிற்கு விளக்கவுரை நல்கியுள்ளார். 'சிவயோக பூமியாகிய பரதகண்டத்தில் ஐம்பத்தாறு தேசங்களில், தமிழ்தேசம் நீங்கலாக, ஐம்பத்தைந்து தேசமொழிகளுக்கும் இல்லாத சிறப்பு தமிழ் மொழிக்கு உண்டு!' என்று காரண காரியங்களைத் தொடர்பு படுத்தி விளக்கியுள்ளார். சுருக்கமாக, 'தமிழ்மொழியே அதிசுலபமாக சுத்த சிவானுபூதியைக் கொடுக்கும்' என்கின்றார். (சமஸ்கிருதத்தில் குடமுழுக்கு செய்ய வேண்டும் என்று கோரிக்கை விடுப்பவர்கள் இதைக் கவனிக்க வேண்டும்).

காஞ்சி சங்கராச்சாரியாரை நம் வள்ளலார் அவர்கள் சந்திக்க நேர்ந்த போது, அடிகளிடம் 'சமஸ்கிருதம்தான் எல்லா பாஷைகளுக்கும் தாய்ப்பாஷை' என்றாராம். உடனே வள்ளலார், புன்முறுவலுடன், 'எல்லா பாஷைக்கும் தமிழ்தான் தந்தை பாஷை' என்று கூறி அவர் கர்வத்தை அடக்கியதாக வரலாறு கூறுகிறது.

அத்தகைய சிறப்பு வாய்ந்த தமிழ்மொழியைத் தமிழர்கள் போற்றிக் கொண்டாடாமல் இருப்பதால் கவிஞர் அவர்கள்,

> **மூத்த தமிழன்னை முற்றத்தில் வைத்துவிட்டு**
> **வாத்து மொழிக்கெல்லாம் வாய்பிளந்தோம் – பூத்தூவி**
> **மாற்று மொழிவருடி மானத்தை விற்றதனால்**
> **ஏற்றம் இழந்துள்ளோம் இங்கு!**

**- பதிவுகள், மீள்வோம்**

என்று தமிழ்மொழியின் பெருமை உணராது, பிறமொழி மீது மோகம் கொண்டு, பெற்றோர் தம் பிள்ளைகட்குத் தூய தமிழில் பெயர் வைக்கா திருந்தால், போலியான சமூக அந்தஸ்து காரணமாக, புத்தகத்திலும் அலுவலகத்திலும் நுழைந்த ஆங்கிலம், அவர்களது வீட்டிற்குள்ளும் நுழைய அனுமதித்து, பேச்சு வழக்கில் உள்ள தமிழ்ச் சொற்களில் கூட ஆங்கில மொழியை இரண்டறக் கலந்து பேசி தமிழர்கள் தமிழைக் கொலை செய்வதைப் பார்த்துவிட்டு, பிறமொழி மோகத்தால் தாய்மொழி யாம் தமிழை விட்டு, வேற்று மொழிகளுக்கு அடிமையாகியதால் தமிழர், நம் ஏற்றத்தை இழந்துள்ளோம் என்ற கவலையில் தோய்ந்து வெளிப்படையாக இக்கவிதையைக் கொடுத்துள்ளார்.

**சூடு சொரணையற்றுச் சோம்பிக் கிடக்கின்றோம்**
**சாடி முறுக்கேற்று செந்தமிழே – பீடுற்று**
**மாண்ட மொழியுணர்வும் மான இனஉணர்வும்**
**மீண்டு உலகாள்வோம் வென்று!**

**- பதிவுகள், மீள்வோம்**

எவ்விதக் குற்ற உணர்வும் இல்லாமல் கண்டதே காட்சி, கொண்டதே கோலம் என்று வாழ்ந்துவரும் தமிழர்களைத் திட்டி, அவர்களிடம் மொழி உணர்வையும், இன உணர்வையும் மீட்டுக் கொணர்ந்து தமிழ்நாட்டை ஆள்வதற்குத் தமிழையே துணையாகக் கவிஞர் அழைப்பதைப் பார்க்கும் போது,

**கட்டுண்டோம், பொறுத்திருப்போம் காலம் மாறும்**
**தருமத்தை யப்போது வெல்லக் காண்போம்**

என்ற பாரதியார் கூற்றின் தாக்கம் காணப்படுகிறது.

**ஆய்வு தொடரும் ....**

**க**டந்த 10 ஆண்டுகளில் அதிகரித்துள்ள வங்கிகளின் ரூ.14.56 கோடி வாராக்கடன் பற்றி அக்கறையில்லாத ஒன்றிய அரசு. இதைப்பற்றி மதுரை நாடாளுமன்ற உறுப்பினர் சு. வெங்கடேசன் அவர்கள் புள்ளி விவரத்துடன் அறிக்கை வெளியிட்டிருக்கிறார். பா.ச.க. ஆட்சியில் வங்கிகளில் கடன்பெற்று பணத்தைத் திருப்பித் தராமல் வெளிநாட்டுக்குத் தப்பிச் சென்றவார்கள் பற்றிய கவலை ஒன்றிய அரசுக்கு இல்லை என்பதுதான் நம் கவலை.

# தன்மானம் காப்பாய்!

– **கே.பி. பத்மநாபன்,** கோவை



அறுசுவை விருந்தை உண்டும்
ஆழ்துயில் நித்தம் கொண்டும்
பொறுப்பினை உணரா வண்ணம்
போதையில் வீழ்ந்து கொண்டும்
தறுதலை போல்தி ரிந்தால்
தமிழனே உன்னி னம்தான்
சறுக்கியே வீழ்தல் தன்னைச்
சரிவர உணர்வ தெந்நாள்?

கறுப்பினை வெளுப்பாய்க் கண்டும்
கட்சியில் பேதம் கொண்டும்
கிறுக்கராய்ச் சாதி பேதக்
கீழ்மையால் அடித்துக் கொண்டும்
வெறுப்புடன் இருக்கும் உன்னை
வீழ்த்தியே மாய்த்த ழிக்கக்
குறுநரிக் கூட்டம் ஒன்று
குழுமலை என்று ணர்வாய்?

முறுக்கியய மீசை யோடும்
முழுஇன வீரத் தோடும்
பொறுப்புடன் நீள முந்து
பொங்கியே பொருதல் எந்நாள்?
சிறுத்தையே வெளியே வந்து
சீறியே பாய்ந்து செல்லச்
சுறுசுறுப் பாக வாநீ;
சொந்ததன் மானம் காப்பாய்!

**செ**ன்ற திங்கள் 29.4.24 அன்று நடைபெற்ற பாவேந்தர் பாசறையின் 32ஆவது ஆண்டுக் கவிதைத் திருவிழா பற்றிய விரிவான செய்தி சூன் 2024 முகம் இதழில் வெளியாகும்.



# புழந்தமிழ் இலக்கியங்களில் தமிழ் எழுத்தின் ஒலியும் – இசையும்!

- திருக்குறள் சொ. பத்மநாபன்

**எழுத்து:**

'இசையொடு சிவனிய நரம்பின் மறைய என்பனார் புலவர்' - என்று தொல்காப்பியம் (1.33) எழுத்தைப் பற்றிக் கூறுகிறது.

'யாழ் எழுத்திற் பாவாற் புணர்க்க' - என்று பஞ்ச மரபு நூல் எழுத்தைப் பற்றிக் கூறுகிறது. 'எழுத்து அசைத்து இசைக் கோடலின் அசையே' என்று யாப்பருங்கல விருத்தி எழுத்தைப் பற்றிக் கூறுகிறது.

எழுத்தின் ஒலியானது நேரசை, நிரையசை ஆகிய இரண்டின் மூலமாகவே ஒலிக்க வேண்டும் என்றும், ஒரு பாடலின் குறைந்தபட்ச சிறிய இசைப்பிரிவே அசைதான் என்றும் மேற்கண்ட நூல்கள் கூறுகின்றன.

**சீர்:**

இசை ஒலியில், ஒரு பாடலில் அசை என்னும் சிறிய இசைப் பிரிவுக்கு அடுத்த பெரிய இசைப் பிரிவு 'சீர்' ஆகும். நேரசையும், நிரையசையும் சேர்ந்து 'சீர்' என்னும் பெரிய இசைப் பிரிவை உருவாக்கும். இது பாடலின் மிக முக்கியமான இசை உட்பிரிவாகும்.

'அசையும் சீரும் இசையுடன் சேர்த்து
வகுத்தனர் உணர்த்தல் வல்லலோர் ஆறே'

- என்று தொல்காப்பியம் செய்யுளியல் கூறுகின்றது.

'அசையும் சீரும் அளந்து நொடி போக்கி
இசைகொள் பாடலின் இசைந்துடன் ஒழுக'

- என்று பெருங்கதை (4:5 5:6) கூறுகின்றது.

சம்பந்தர் தேவாரம் 46ஆம் பாடலும் (தொழுப்பழுவூர்) ஐந்திறம் 87ஆம் பாடலும் இதையே கூறுகின்றன.

'அசை இயைந்து சீர்கொள நிற்றலின் சீரே'

- என்று யாப்பருங்கல விருத்தி கூறுகிறது.

'பண்அமை இன்சீர்' - என்று கலித்தொகை (102.35) கூறுகிறது.

'எழுத்து, அசை, சீர், தளை, அடியென் றைந்தாய்
வழுத்தும் இயலால் தொடைநிலை நோக்கி
செழுநிலைப் பாவே சீருற் றோங்கும்'

- என்று ஐந்திறம் 89ஆம் பாடல் கூறுகிறது.

'எழுத்தும் புணருத்தான் மணிய
வண்ணக் கன்தேவன் சாத்தன்'

- என்று அரிச்சலூர் கல்வெட்டு (கி.பி.4ஆம் நூற்றாண்டு) கூறுகின்றது.

இசையில் எழுத்தின் தெளிவான ஒலியானது இலக்கண விதிகளின் படி இணைந்து இசை வண்ணத்தை உருவாக்கும் என்பதை இவ்வரிகள் புலப்படுத்துகின்றன. அப்படிப்பட்ட இசை வண்ணத்தை உருவாக்க வல்லவன் தேவன் சாத்தன் என்பதையும் இதிலிருந்து தெரிந்து கொள்ள முடிகிறது.

நேரசை, நிரையசை சேர்ந்து சீர் உருவாகின்றது. சீர்களில் மூன்று வகைகள் உள்ளன. அவை: ஈரசைகள் உள்ள சீர் 'இயற்சீர்' என்றும், மூவசைகள் உள்ள சீர் 'உரிச்சீர்' என்றும், நாலசைகள் உள்ள சீர் 'பொதுச்சீர்' என்றும் கூறப்படுகிறது.

பண் இசைக்கப்படும் பொழுது, அதன் சுர இசையானது தாள இசையால் வழிநடத்தப்படுகிறது என்றும், சுர இசைக்கும், தாள இசைக்கும் ஏற்ற பாலமாக சீர் செயல்படுகிறது என்றும் கூறப்படுகிறது.

சுர இசையில் 'இழை' (இசைஒலி) என்பது ஆழமான பங்கு வகிக்கிறது. 'பனுவல்' என்பது நுணுக்கமான இசையொலிகள் (இழை) அமைந்த பாட்டாகும். கருவி இசையிலும், தாள இசையிலும் சீரின் பங்கு முக்கியத்துவம் வகிக்கிறது. தாள இசையில் 'தூக்கு' என்ற பெயரில் சீர் முக்கிய பங்காற்றுகிறது.

**தாளம்** (கொட்டு): இதில் 3 வகைகள் உள்ளன. அவை:

1. பாடலுக்குப் பொருத்தமான கொட்டுக்கு (தாளத்திற்கு) 'கீதாங்கம்' என்று பெயர்.

2. ஆடலுக்குப் பொருத்தமான கொட்டுக்கு 'நிருத்தாங்கம்' என்று பெயர்.

3. பாடலுக்கும் ஆடலுக்கும் பொருத்தமான கொட்டுக்கு 'உபயாங்கம்' என்று பெயர்.

இச்செய்தி சிலப்பதிகாரம் அரங்கேற்றுக் காதை 14ஆம் அடியில் காணப்படுகிறது.

**தூக்கு:** தாள இசையில் சீருக்குத் 'தூக்கு' என்ற பொருளும் உள்ளது. ஒரு தாளச் சிறு கட்டமைப்பானது ஏழு வகையான தூக்குகள் கொண்டது. அவை,

ஒரு சீருக்குப் பொருத்தமாக அமைந்தால் அது 'செந்தூக்கு' எனப்படும். இரண்டு சீர்களுக்குப் பொருத்தமாக அமைந்தால் அது 'மதலை' எனப்படும். மூன்று சீர்களுக்குப் பொருத்தமாக அமைந்தால் அது 'துணிபு' எனப்படும். நான்கு சீர்களுக்குப் பொருத்தமாக அமைந்தால் அது 'கோயில்' எனப்படும். ஐந்து சீர்களுக்குப் பொருத்தமாக அமைந்தால் அது 'நிவப்பு' எனப்படும். ஆறு சீர்களுக்குப் பொருத்தமாக அமைந்தால் அது 'கழாஅல்' எனப்படும். ஏழு சீர்களுக்குப் பொருத்தமாக அமைந்தால் அது 'நெடுந்தூக்கு' எனப்படும்.

இச்செய்தி சிலப்பதிகாரத்தில் அரங்கேற்றுக் காதையில் 15-16 அடிகளில் காணப்படுகிறது.

**கல்லாடம்**: ஒலி அதிர்வு விதிகள்: யாழ் நரம்பின் இழுவிசையில் (Tension) உண்டாக்கப்படும் நுணுக்கமான மாற்றங்களால் இசையின் அதிர்வு எண்ணில் நுணுக்கமான மாற்றங்கள் ஏற்படும் என்று கல்லாடம் என்னும் நூல் கூறுகிறது.

**புறநானூறு:** வாய்ப்பாட்டில் இசை இழை பயன்படுத்தப்பட்டதையும், உயர்ந்த இசை அழகியலுடன் அமைந்த பாடல் 'பனுவல்' என்று அழைக்கப்பட்டதையும் புறநானூறு தெரிவிக்கிறது.

**அகநானூறும் - நன்னூலும்:** இசை இழையின் பணிக்கு ஏற்ற ஒலியுடைய எழுத்துகள் சேர்ந்து உருவான சொற்களைப் பயன்படுத்தி பனுவலை உருவாக்கிய புலவரின் திறமையை அகநானூறும் நன்னூலும் விளக்குகின்றன.

**சீவக சிந்தாமணியும் பஞ்ச மரபும்:** முதல் சுரத்திற்கு அடுத்து அதற்குமேல் 5ஆவதாக உள்ள சுரம் வரும் வகையில் அமைந்த

இசையில், இசை எழுப்புபவர் முதல் சுரத்திலிருந்து அடுத்த சுரத்திற்கு அப்படியே தாவ முடியாது. மாறாக இசையின் தன்மைக்கு ஏற்றவாறு, இரண்டு சுரங்களையும் இசை இழையின் துணையுடன் இணைக்க வேண்டும் என்று சீவக சிந்தாமணியும், பஞ்ச மரபு நூலும் கூறுகின்றன.

**தேவாரத்தில் தமிழ்இசை:** வழக்கொழிந்த காலத்தில் பாடப்பட்ட தேவார இசைக்கும், இராஜராஜ சோழன் காலத்தில் புதுப்பிக்கப்பட்ட தேவார இசைக்கும் வேறுபாடுகள் உள்ளன என்றும், இப்பொழுது பாடிக் கொண்டிருக்கும் ஓதுவார்கள் ஆளுக்கொரு இசையில் பாடி வருவதும் இசையில் ஒருமித்த கருத்து இல்லை என்பதும் தெரியவருகிறது என்று இசை ஆய்வாளர் டாக்டர் செ.அ.வீரபாண்டியன் கூறியுள்ளார்.

தேவார இசையில் பாடும்போது பறை, உடுக்கை போன்ற இசைக் கருவிகளும் பயன்படுத்தப்பட்டன என்று கூறப்படுகிறது. ஆனால் இன்று ஓதுவார்கள் அத்தகைய இசைக் கருவிகளைப் பயன்படுத்துவதே இல்லை. ஆனால் சங்க இலக்கியங்களில் எல்லாவிதமான (குரலிசை உட்பட) குழல் இசைக் கருவிகளும் யாழிசைக் கருவிகளும் தோலிசைக் கருவிகளும் வாசிக்கப்பட்டன என்று தெரிய வருகிறது.

**சுருதி சேர்த்தல்:** சுருதி சேர்த்தல் என்பது தமிழிசையில் இருந்தது என்பதையும் அது எவ்வாறு சுருதி சேர்க்கப்பட்டது என்பதையும் சிலப்பதிகாரத்தில் காண முடியும். இனிமை தரும் இசை உறவுகளின் (Consonant Relations) அடிப்படையில், ஒரு தானத்தில் (ஸ்தாயி) 25 அதிர்வு எண் தகவு மதிப்புகளுடைய 25 சுருதிகள் இருப்பதாகவும், அவற்றுள் 22 சுருதிகள் தனித்துவமானவை என்றும் கூறப்படுகிறது.

இசை ஒலியின் அதிர்வு எண்ணிற்கும், இசைஒலி முழக்கத்திற்கும் பொருத்தமான வகையில் இணைப்பு இருக்க வேண்டும். இந்த இசை இணைப்புப்பணி 'இசைஇழையின்' (Music thread) துணையுடன் நடைபெற்றதற்கு இலக்கியங்களில் சான்றுகள் உள்ளன. (சிலப்பதிகாரத்தை விடப் பெருங்கதையில் யாழைப் பற்றிய தகவல்கள் கூடுதலாக உள்ளன.)

**பெருங்கதை:** யாழ் இசைப்போன் தன் விரல்களின் மூலம் நுணுக்கமான முறையில், இசை இழையின் பணியைச் செய்துள்ளான் என்பதை பெருங்கதை நூலில் காண முடிகிறது. இதே செய்தி கல்லாடம் நூலிலும் காணப்படுகிறது.



**- திருக்குறள் சொ. பத்மநாபனின்**
**தமிழ் இசையியலில் ஏற்றங்களும் மாற்றங்களும்**
என்னும் நூலிலிருந்து. பக்.26-31

# இந்திய மொழிகளில் தமிழ்ச்சொற்கள்!




**முனைவர் மலையமான்**
**044 – 24996611**


**இ**ன்றைய தமிழகத்தின் தெற்குப்பகுதி, நெடுங்காலத்திற்கு முன்பு விரிவாக இருந்தது. லெமூரியா, கோண்டுவானா என்று மேல்நாட்டாரால் அது குறிப்பிடப் பட்டது. அதைக் குமரிக்கண்டம் என்று தமிழ் இலக்கியங்கள் அறிவித்தன. இயற்கைப் பேரிடர் காரணமாக (ஆழிப்பேரலை) அப்பகுதி கடலுள் முழுகியது. அங்கு வாழ்ந்தோர் (தமிழர்) வடக்கு நோக்கிக் குடிபெயர்ந்தனர். தமிழ கத்தைக் கடந்தும் வடதிசையில் பரவினர். இந்தியா முழுவதும் பரவி வாழ்ந்தார்கள். டிராட்மன், கோந்தரதோவ், அம்பேத்கர், ஆனந்தரங்கம் பிள்ளை, எஸ்.கே.சட்டர்ஜி முதலியோர் இந்த உண்மையை உரைத்தார்கள்.

பின்பு வேற்று மொழியாளர் கள் இந்தியாவிற்குள் நுழைந்தனர். மொழிக்கலப்பு (திணிப்பு) ஏற்பட்டது. தமிழ்மொழி சிதைந்தது. முற்றிலும் சிதறுண்டது. இந்தியா வில் பலப்பல மொழிகள் பிறந்தன. ஆனால், அந்த மொழிகளில் தமிழ்ச் சொற்கள் திரிபடைந்த நிலையில் வாழ்ந்து வருகின்றன. இவற்றை இன்றைய அறிஞர்கள் ஆராய்ந்து அறிவித்து வருகிறார் கள்.

4000 ஆண்டுகளுக்கு முன்பு, இன்றைய மராத்திய நிலப் பகுதி திராவிடர்களின் (தமிழர் களின்) ஆட்சியின் கீழ் இருந்தது என்று கட்ரே என்ற மராத்திய ஆய்வாளர் கூறினார். 'மராத்திய மொழிகளில் தமிழ்ச் சொற்கள், மாற்றம் பெற்று வாழ்கின்றன' என்று மற்றொரு மராத்தி மொழி ஆய்வாளரான விசுவநாத் கைரே அறிவித்தார். 'மும்பேய்' (மூன்று தேவதை) மும்பை ஆனது. 'புனல்நாடு' - பூனா என்று திரிந்தது. 'ஆறல்' (கருமணல்) - ஹரற்ற, 'ஆறு' - ஹார, 'ஊறு' (துன்பம்) ஹூர, 'கூழ்' - கூறர் மன்னன் (மற்போர் புரிபவன்) - 'மல்ஹாரர் பாண்டியன்' - பாண்டே என்று மாற்றம் பெற்றன என்று கைரே சொன்னார். (அநன்யா பாண்டே - திரைப்பட நடிகை; ஹார்த்திக் பாண்டே - கிரிக்கெட் விளையாட்டு வீரர்; மனோஜ் பாண்டே - படைத்தளபதி என்று பாண்டே என்ற பின்ஒட்டுப் பெயர்கொண்ட பலர் இன்று இருக்கிறார்கள்.

பள்ளி என்ற தமிழ்ச் சொல்லின் திரிபான வளி (அ) ஒளி

என்று முடியும் ஊர்ப்பெயர்கள் மகாராட்டிர மாநிலத்தில் 800க்கும் அதிகமாக உள்ளன. வளி என்ற பின்ஒட்டு கொண்ட பெயரின் திரிபு, குஜராத், பஞ்சாப், அரியானா, உத்தரப்பிரதேசம், ஒடிசா ஆகிய மாநிலங்களிலும் உள்ளன. கடற்கரையை ஒட்டிய கொங்கணி, தக்காண பீடபூமியின் தென் கிழக்குப் பகுதி ஆகியவற்றில் திராவிடர்கள் (தமிழர்கள்) அதிகமாக வாழ்ந்திருக்கலாம். 'மகாராட்டிரா வில் வடகிழக்குப் பகுதிகளில் ஓடும் ஆறுகளுக்குத் திராவிட (தமிழ்ப்) பெயர் இருப்பது, தொடக்கக் காலத்தில் மகாராட்டிரா முழுவதும் திடாவிடம் (தமிழ்) பேசப்பட்டிருக்க லாம் என்று எண்ணத் தோன்று கிறது' என்று டோனி ஜோசஃப் எழுதியுள்ளார்.

பேரா.பல்தேவ் ராஜ்குப்தா மொழியியல் அறிஞர் (இவருடைய பெயரில் உள்ள 'தேவ்' என்பது தெய்வம் என்ற சொல்லிலிருந்து வந்தது). இவர் பஞ்சாபி - தமிழ் மொழி ஒப்பீட்டாய்வு செய்துள்ளார். பஞ்சாபி மொழியில் சில தமிழ்ச் சொற்கள் மாறாமல் உள்ளன. (எ-டு): அம்மா, மாமா, தாத்தா, தாதா (மெல்லொலி) உதிர் - இவை அப்படியே இருக்கின்றன. சில தமிழ்ச்சொற்கள் திரிபடைந்து உள்ளன. ஆனால் அவற்றின் பொருள் மாறவில்லை. (எ-டு): மாரு - மால்; தூரம் - தூ; ஆமாம் - ஹா; வெட்டு - வெட் (மெல்லொலி); வா - ஆ என்பன). சில தமிழ்ச் சொற்கள் திரிபுநிலை பெற்றுப் பஞ்சாபி மொழியில் வாழ்கின்றன. ஆனால் அவற்றின் பொருள் மாறி உள்ளன. பாப்பா - பாப்பே (சகோதரி); பால் - பால் (உடல் ஓம்புதல்); பல் - பல் (இயங்குதல்) யார் - யார் (நண்பன்); கல் - கல் (கலை); கலை என்பதற்கு மூலச்சொல் கல்தான்). இந்தப் பொருள் மாற்றம் காலப்போக்கில் ஏற்பட்டிருக்கும். இந்தச் சொல் ஆராய்ச்சி முடிவு களைப் பல்தேவ் ராஜ்குப்தா அறிவித்தார். சிந்திமொழி, பாகிஸ் தானத்தில் பேசப்படுகிறது. வட இந்தியாவிலும் இது வாழ்கிறது. சிந்தி மொழியாளர்கள் சென்னை யிலும் நலமாக வாழ்கிறார்கள்.

'சிந்தி மொழியின் அடித்தளம் திராவிட மொழி' என்று மேனாள் துணைவேந்தர், ஆய்வாளர் குலாம் அலி அல்லானா அறிவித்தார். சிந்தி மொழிப் பேராசிரியரான பரசோ கித்வானியும் தன் தாய்மொழியின் மூலத்தைத் தேடினார். சிந்தி மொழியின் வேர், தமிழ் மொழியில் இருப்பதைத் தற்செயலாகக் கண்டு பிடித்தார். அவர் தன் ஆராய்ச்சி யைப் பற்றிச் சென்னையில் உரையாற்றினார். அவர் தஞ்சைப் பல்கலைக் கழகத்திலும் அண்ணாமலை பல்கலைக் கழகத் திலும் ஆய்வுரை வழங்கினார். (இக்கட்டுரையாளருக்கு அவருடன் தொடர்பு இருந்தது.) அவருடைய ஆய்வு அறிவித்த முடிவுகள் பின்வருவன:

"அம்மா என்பது அமா, அமி என்று சிந்தி மொழியில் உள்ளது.

பெண் - பெ (மெல்லொலி); அத்தன் - அட்டா (மெல்லொலி); தேவன் - தேவ்; கோதை (பெண்) - கோது, தலை - தாரு; உள் - உலோ; கருமை - கரோ; பலர் - வலர்; துப்பு - துக என்று இப்படிப் பல தமிழ்ச் சொற்கள் சிந்தி மொழியில் இன்றுள்ளன. இப்படி, பல நூறு தமிழ்ச் சொற்கள் சிந்தி மொழியில் இருப்பதைத் தேடித் தொகுத்தார். அந்த அரிய கை எழுத்துப் படியை அவர் பணிபுரிந்து வந்த தக்காணக் கல்லூரியிடம் அளித்தார். அதை வெளியிடும்படி வேண்டினார். அவர் மறைந்தார். அந்தப் பெருநூலும் மறைந்தது.

கடச் மாநிலப் பரப்பில் கைத்தொழில் புரியும் அடித்தட்டு சிந்து மக்களின் மொழியில் நூற்றுக் கணக்கான தமிழ்த் திரிபு சொற்கள் இருப்பதை அவர் கண்டுபிடித்தார். கீழ்நிலை சிந்து மக்களில் ஒரு பிரிவினரிடையில் 'பெருமாள்' என்ற தமிழ்ப் பெயர் பரவலாக இருப்பதையும் அவர் அறிவித்தார். (பார்க்க: செந்தமிழின் மகள் சிந்தி மொழி - மலையமான் கட்டுரை),

இமய மலையின் அடிவாரப் பகுதியில் பழைமையான சில மொழிகள் பேசப்படுகின்றன. அவற்றைச் சாத்தூர்சேகரன் ஆய்வு செய்தார். பட்டாச்சாரியாவும் ஆய்வு நிகழ்த்தினார். அந்த மொழிகளில் மாற்றுருவம் கொண்ட தமிழ்ச் சொற்கள் இருப்பதை அறிந்த அறிஞர்கள் உரைத்தார்கள்.

இராசேந்திர சோழன், இந்தியாவின் அலெக்சாண்டர். அவன் கங்கை வரை படை யெடுத்துச் சென்றான்; வென்றான். அவன் கடல்கடந்து சென்று தென்கிழக்கு ஆசிய நாடுகளிலும் தன் வெற்றிக் கொடியை நாட்டினான். கங்கையை வென்ற அவன் 'கங்கை கொண்டான்' என்ற பட்டத்துக்கு உரியவன் ஆனான். அவன் காலத்தில் தமிழர்கள் கங்கைப் பகுதியில் குடியேறி இருந்திருக்கலாம். வங்காளியின் இரத்தத்தில் திராவிடரின் (தமிழரின்) இரத்தக்கலப்பு இருக்கிறது என்று சுபாஷ் சந்திரபோஸ் அறிவித்தார். வங்க மொழியில் திரிபு நிலைத் தமிழ்ச் சொற்கள் கலந்துள்ளன. பேராசிரியர் முத்தையா, தாகூரின் சாந்தி நிகேதனில் பணியாற்றியவர். அவர் தமிழ் நூல்களை வங்க மொழியில் பெயர்த்தார். வங்க மொழி நூல்களையும் தமிழாக்கம் செய்தார். வங்க மொழியில் உரு திரிந்த தமிழ்ச் சொற்கள் இருப்பதை அவர் கண்டுணர்த்தினார். (எ-டு): இரவு - ராதி; தீ - தீபம்; மணம் - மண்; தெய்வம் - தே; நகர் - நகர்; குடில் - குடிர் முதலியன. வங்க மொழியில் 'வ' என்ற எழுத்து இல்லை. 'வ' என்ற எழுத்துக்குப் பதிலாக 'ப' என்பதே வரும். (வீர பூமி என்பது பீர் பூமி என்று அங்கே கூறப்படும். வங்காள தேசம், பங்களா தேசம் என்றே சொல்லப் படும்.)

சகோதரர் ஏசுதாஸ், தமிழ் நாட்டைச் சேர்ந்தவர். அசாம்

பகுதியில் சமயப் பரப்புரைப் பணி அவருக்கு அளிக்கப்பட்டது. அவர் அங்குச் சென்றார். அங்குள்ள மொழிகளைக் கற்றார். அந்த மொழிகளில் திரிந்த தமிழ்ச் சொற்கள் இருப்பதை உணர்ந்தார். அவற்றைத் தொகுத்தளித்தார். (அவற்றை இக்கட்டுரையாளருக்கு அனுப்பினார்). அவற்றில் சில வருமாறு: அவை (சபை) - ஹபா, பயம் - பயஹ; மே (மேன்மை) - மேஹ்; தீ - தீப்; படி - பட ; அம்மா - மாதா; மனிதன் - மனுஷ் முதலியன.

வட நாட்டிடலுள்ள மொழி களுக்குத் தாய் சமஸ்கிருதம் ஆகும். அதுவும் பழைமையான மொழிதான். இதுவும் செவ்வியல் (செம்மொழி) என்ற சிறப்புக்குரியது. இந்த மொழியிலும் தமிழ்ச் சொற் கள் இருக்கின்றன. கால்டுவெல் முதலியோர் இதை அறிவித்தனர். அம்மா - அம்பா; முகம் - முஹ்; பாதம் - பாதஹ்; மாலை - மாலா; படி - பட்; மீன் - மீன்; முத்து - முக்தா; பூ - புஷ்பா; உலகம் - லோஹ; பழம் - பல்; கண்டம் - கண்ட முதலியன. சமஸ்கிருதம், இந்தோ ஐரோப்பிய மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தது என்றார் வில்லியம் ஜோன்ஸ். ஆனால் அதன் எழுத்தமைப்பு முறை தமிழையே ஒட்டி உள்ளது.

இந்தி அண்மையில் தோன்றிய மொழி. இந்த மொழி யிலும் தமிழ்ச் சொற்கள் உள்ளன. வணிகர் - பனியா; கிழான் - கிசான் (ஜெய்ஜவான் - ஜெய்கிசான் என்ற முழக்கம்) பட்டணம் - பாட்னா; புகல் - போல் (வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் இதை அறிவித்தார்) எழுத்து இடம் மாறித் தமிழ்ச் சொற்கள் இந்தியில் அமைந் துள்ளன. ம்+ஆ - இது மா என்றாகும். எழுத்து மாற்றம் பெற்றால் 'ஆம்' என்று அமையும். இந்திமொழியில் உள்ள 'ஆம்', (மாம்பழம்) என்றே பொருள்தரும். இவ்வாறே வ்+ஆ என்பது, ஆவ் என்று எழுத்து இடம் மாற்றம் பெற்றது. 'வான்' என்ற பொருளையே தந்தது. 'ஊர்' என்பது தமிழ்ச்சொல். இதன் முன்னால் 'ப்' என்ற எழுத்து சேர்ந்தால் அது 'பூர்' என்றாகும். இந்தப் பின்னொட்டைப் பெற்றுப் பல ஊர்கள் வட நாட்டில் உள்ளன. (கர்தார்ப்பூர், கரக்பூர், ஜெய்ப்பூர், மணிப்பூர் முதலியன). கோட்டை என்ற சொல் 'கோட்' என்று குறுகியது. (எ-டு): பதான்கோட், சியால்கோட்) 'நகர்' என்ற தமிழ்ச் சொல்லும் வடக்கில் உள்ளது.


தமிழில் வடமொழித் திணிப்பு ஏற்பட்டதால், தெலுங்கு, கன்னடம் முதலிய மொழிகள் தோன்றின. நெடுஞ்சேரலாதன், செங்குட்டுவன் முதலியோர் ஆட்சி செய்த சேர நாடு, கேரளம் ஆனது. அங்கே மலையாளம் இன்றுள்ளது. இந்தத் திராவிட மொழிகளில் தமிழ்ச் சொற்கள் இருப்பது வியப்பான செய்தி இல்லை. திருந்தாத திராவிட மொழிகளிலும் தமிழ்ச் சொற்கள் இருப்பது இயல்புதானே! 'உடு' என்றால்

விண்மீன் (நுட்சத்திரம்). 'உடு' என்ற சொல்லின் அடிப்படையில் 'உடுப்பி' என்ற ஊர்ப்பெயரே உள்ளது. இஃதொன்றே தமிழின் ஆட்சியை அறிவிக்கும்.

தமிழ்மொழி உலகின் முதன்மொழி. இது, முதல் செவ்வியல் மொழி. செம்மொழி என்ற உயர்வு உடையது. பக்தி இலக்கியப் பட்டியலில் இது தலைமை தாங்குகிறது. இது உலகப் பெருநூலாம் திருக் குறளைப் பெற்றுள்ளது. தமிழ் அறிவியல் மொழி. ஏறத்தாழ 4000 ஆண்டுகளாகத் தொடர்ந்து வாழுந்து கொண்டிருக்கும் மொழி. சுமேரிய நாகரிகம், சிந்துவெளி நாகரிகம், கீழடி நாகரிகம் முதலிய நாகரிகப் பெருமை கொண்ட மொழி. இந்தியா முழுவதும் பரவி இருந்த மொழி. இவற்றுடன், இன்று பல இந்திய மொழிகளிலும் வாழும் மொழி. எனவே இதை இந்தியாவின் ஆட்சிமொழி ஆக்கலாமே!

---

# வாழ்க நூறாண்டு!



**மு**கம் இதழின் புரவலர் திருவொற்றியூர் **வெ. பொன்னுரங்கம்** அவர்கள் இத்திங்கள் 09.05.2024 அன்று தம் 92ஆம் அகவையை நிறைவு செய்து 93ஆம் அகவையில் அடியெடுத்து வைக்கின்றார். பொதுநலச் சிந்தனையாளரான இவர், முகம் இதழின் வளர்ச்சியில் பங்கெடுத்து ஊக்குவித்து வருபவர். தம் தாய், தந்தை, துணைவியார், மாமன் ஆகியோரின் பிறந்தநாள், நினைவுநாள்களில் முகம் இதழுக்கு நன்கொடை வழங்கி அவர்களின் நினைவைப் போற்றி வருகின்றார். தம் பகுதியில் இயங்கும் டாக்டர் அம்பேத்கர் மன்றத்திற்கும் முகம் இதழ் சேர நன்கொடை வழங்கியுள்ளார். அவருடைய பொதுநலச் சிந்தனைக்குத் தலைவணங்குகிறோம்.

93ஆம் அகவையில் அடியெடுத்து வைக்கும் திரு. வெ. பொன்னுரங்கம் அவர்கள் உடல்நலத்துடன் நீடு வாழ்ந்து நூறாண்டு காண வாழ்த்தி மகிழ்கிறோம். தம் பிறந்த நாளையொட்டி முகம் இதழுக்கு ரூ.1000/- நன்கொடை வழங்கியுள்ளார்.

# மக்கள் கவிஞர் பட்டுக்கோட்டையார் பிறந்தநாள் விழா!



மக்கள் கவிஞர் பட்டுக்கோட்டை கலியாணசுந்தரம் அவர்களின் 94ஆவது பிறந்தநாள் விழா 13.4.2024 அன்று மக்கள் கவிஞர் அறக்கட்டளை சார்பில் சென்னை இரசியன் கலை அறிவியல் பண்பாட்டு மையத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

மக்கள் கவிஞர் அறக்கட்டளை நிறுவனர் மற்றும் தலைவர் திரு மெய்.ரூசவெல்ட் அவர்களின் ஏற்பாட்டில் நடந்த இவ்விழாவில் அவர் வரவேற்புரையாற்றினார்.

நீதியரசர் தெ.ந.வள்ளிநாயகம் தலைமையில், திரு. என். இராமதாஸ் (புதுவை வணிகவரி ஆணையர் - ஓய்வு), பேரா. முனைவர் உலகநாயகி பழனி, முனைவர் இதயகீதம் இராமானுசம், முனைவர் கஸ்தூரி ராஜா, முனைவர் மணிமேகலை சித்தார்த் ஆகியோருக்கு "**மக்கள் கவிஞர் விருது**" வழங்கப் பெற்றது. பத்மஸ்ரீ நல்லி குப்புசாமி, பேராசிரியர் இராம.குருநாதன் ஆகியோர் விருதுகளை வழங்கிச் சிறப்பித்தனர். ஊடகவியலாளர் கவிஞர் விஜயகிருஷ்ணன், கவிஞர் மருதகாசியின் மகன் திரு.மருதபரணி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

பேரா. முனைவர் பெ.கி.பிரபாகரன் விருதாளர்கள் அறிமுக உரையாற்றினார். மக்கள் கவிஞர் அறக்கட்டளை செயலாளர் திரு. தெ.தி.பழனிவேலு நன்றியுரையாற்றினார். கவிஞர் காவிரி மைந்தன் நிகழ்ச்சியை ஒருங்கிணைத்து நெறிப்படுத்தினார். தொடக்கத்தில் பட்டுக்கோட்டையாரின் பாடல்களுக்கு கலைமாமணி திருமதி ஷோபனா ரமேஷ் குழுவினரின் பரதநாட்டிய நிகழ்ச்சி நடைபெற்றது.

# முகத்தில் முகம் பார்க்கலாம்

(15 ஆம் நாளுக்குள் வரும் திறனாய்வுகள் மட்டுமே வெளியிடப் பெறுகின்றன. உங்களைக் கவர்ந்த ஓரிரு படைப்புகளை மட்டுமே திறனாய்வு செய்க!)

☆ **நடுவிக்கோட்டை நவீன்குமார்:** கவியரசரைக் காணாமலேயே அவரது புகழை உயர்த்தும் உன்னதச் செயல்களை உலகிற்குத் தந்து கொண்டிருக்கும் முகப்போவியக் கவிஞர் காவிரி மைந்தன் அவர்களின் பணி போற்றுதற்குரியது. அதுவும் கவியரசு பெயரில் ஒரு பல்கலைக் கழகம் அமைக்க முயன்றுவரும் செய்தி மகிழ்ச்சியளிக்கிறது. (ஆ) மரண பயத்தை விலக்க உதவும் 'இறப்பியல்' எனும் புது மருத்துவ அறிவியல், நோயாளிகளின் விருப்பத்திற்கேற்ப 'தாமே கருணைத் தற்கொலை செய்து கொள்ளும் உரிமை', மரணத்தை மகிழ்வோடு எதிர்கொள்ளும் காரணிகள் போன்ற அரிய அறிவியல் தகவல்களை முனைவர் இ.ஜே.சுந்தர் தந்தமைக்குப் பாராட்டுகள்.

☆ **தென்னிலை இராம. கோவிந்தன்:** கண்ணதாசனின் நல்விரும்பி காவிரிமைந்தனின் படமும் கட்டுரையும் மிக அருமை. (ஆ) 'வீசட்டும் புதுத் தென்றல்' வரிசையில் இ.ஜெ.சுந்தரின் 'மரணம் மகிழ்ச்சியே' கட்டுரை சீரிய சிந்தனையைக் கிளறிடும் ஒன்றாக அமைந்துள்ளது. (இ) தன் வாழ்நாளெல்லாம் இந்திய நாடு விடுதலைக்கு உழைத்தவரும், சுதேசி கப்பல் கம்பெனியை நடத்தியவரும், சிறையில் செக்கிழுத்தவருமான வ.உ.சி. தன் மனைவியின் கழுத்து நகைகளை விற்றுத் திருக்குறள் உரை எழுதிப் பதிப்பித்தது நெஞ்சில் ஆழப் பதிந்துள்ளது.

☆ **புலவர் தங்க. சங்கரபாண்டியன்** (பொழிச்சலூர்): வ.உ.சி. எழுதிய திருக்குறள் அறத்துப்பால் உரைக்கு அவரின் முன்னுரையைத் தேடி எடுத்துப் பிரசுரித்துள்ளீர்கள். வ.உ.சி. அவர்கள், மணக்குடவர் உரையை வரவேற்று ஆதரித்தார். மணக்குடவரும் பரிமேலழகரும் அதிகார முறை வைப்பில் சிறிதும், குறட்பா வைப்பு முறையில் பெரிதும் வேறுபட்டதோடு, பல குறள்களில் வெவ்வேறு பாடங்கள் கொண்டும், பலப்பல குறள்களுக்கு வெவ்வேறு பொருள்கள் உரைத்தும் உள்ளனர் என்பது நூற்றுக்கு நூறு முற்றிலும் உண்மை.

☆ **வேலூர் மூர்த்தி** (செ.100): திரையில் நடிப்பவர்கள் அரசியலில் குதிப்பதற்குக் காரணம், ஆடானை சுகுமார் கூறியதுபோல், நடிப்பவர்களை நடமாடும் தெய்வமாக பார்க்கின்ற புத்திதான். (ஆ) 'ஆளுநர் வெளியேற வேண்டும்' என்ற கீ. வீரமணியின் கோரிக்கை சரியே. 'மானம் கெட்டவன் ஊருக்குப் பெரியவன்' என்கிறது பழமொழி. இது ஆளுநருக்கும் பொருந்தும். இந்தமாதிரி மனிதர்கள் நீதிபதிகளாக இருந்தால் தீர்ப்புகள் எப்படி இருக்கும்?

☆ **திருமதி சாந்தா பாலகிருஷ்ணன்** (குமணன்துறை): புவி வெப்ப மடைவதால் வரவிருக்கும் பேராபத்தை உணர்த்திய அறிவியல் அறிஞர் களின் அறிக்கையை உலகநாடுகள் கவனத்தில் கொண்டு செயல்பட வேண்டும், காற்று மண்டலத்தில் கலக்கும் கார்பனைக் குறைப்பதற்கான நடவடிக்கைகள் எதுவும் எடுக்காமல் இருப்பது விட்டில் பூச்சிகள் விளக்கில் விழும் செயலாகும் என்று முனைவர் வ. நேரு உணர்த்துவது சரியே.

☆ **தீபம் எஸ்.திருமலை** (செ.42): காவிரி மைந்தன் பற்றிய கட்டுரையும் முகப்புப் படமும் அருமையாக இருந்தது. வாழ்த்துகள். பத்திரிகை நடத்துவதில் உள்ள சிரமம் தலையங்கத்தில் எதிரொலித்தது. 'பாத்திரம் முழுக்கத் தண்ணீர்' சிறப்பான பயனுள்ள கட்டுரை.

☆ **திருலோக்கி ந. ஞானசேகரன்:** ஓர் இதழ் அச்சேறி வெளிவர எத்துனை உழைப்பும் பணமும் செலவாகிறது என்பதை வாசகர்கள் சிந்தித்துப் பார்த்து நடந்துகொள்ள வேண்டும் என்ற தலையங்கம் பலருக்கு அறிவுரை. (ஆ) கலைவாணரைத் தேடிவந்து பெரியார் காட்டிய அன்பும் அரவணைப்பும் அவர்தம் பண்பு நலத்தைப் பறைசாற்றின. பன்மொழிப் புலவரின் உண்மை நிகழ்வுகளை மாமணியார் தொகுத்து நம் நெஞ்சில் நிறுத்திவிட்டார்.

☆ **சோலை தமிழினியன்** (செ.-11): 'வாழ்த்துங்கள்' தலையங்கம் அல்ல, இதழின் அங்கம். நானும் ஓர் இதழாசிரியன் என்ற வகையில் தலையங் கத்தின் முழுக் கருத்தையும் வரவேற்கிறேன். (ஆ) காவிரி மைந்தன் கவியரசர் கண்ணதாசனை நேரில் பார்த்ததில்லை என்றாலும் அவரோடு நாள்தோறும் பேசுகின்ற தொண்டர் என்பது ஆச்சரியமே. (இ) 'மரணம் மகிழ்ச்சியே' என்ற தலைப்பில் முனைவர் இ.ஜே.சுந்தர் எழுதிய கட்டுரை அருமையான தகவல் பெட்டகம். 'இறப்பியல்' என்றொரு மருத்துவ அறிவியல் இருக்கிறது என்பது யாரும் அறியாத செய்தி. மரணத்தைப் பற்றி இத்தனை ஆராய்ச்சிகளா?



# வரப்பெற்ற (புது) நூல்கள்!

☆ **குமுறும் நெஞ்சம்:** முனைவர் இ.ஜே.சுந்தர், ரூ,250, ரிதம் வெளியீடு, எண்.58, ஆலந்தூர் சாலை, சைதாப்பேட்டை, சென்னை - 600 015. பேச: 044-2381 0888, 2381 1808.

முகம் இதழில் சூலை 2018 முதல் பிப்ரவரி 2021 வரை வெளியான 31 கட்டுரைகளின் தொகுப்பு. அனைத்தும் புதிய தகவல்கள். ஏறத்தாழ 500க்கும் மேற்பட்ட கட்டுரைகளையும், 20 நூல்களையும் தமிழிலக்கிய உலகிற்குத் தந்துள்ள இவருடைய எழுத்துகள் படிப்போர் சிந்தனையை விரிவடையச் செய்யும் செப்பேடுகள். முகம் இதழ் பலரால் பாராட்டப் பெறுவதற்கு இவருடைய கட்டுரைகளும் காரணம்.

☆ **தமிழா விழித்தெழு!:** புலவர் ந. ஞானசேகரன், ரூ,120/- தமிழ்ப் பதிப்பகம், திருலோக்கி (அஞ்சல்), துகிலி (வழி), தஞ்சை மாவட்டம் - 609 804. பேச: 94437 14386

தமிழன் விழித்தெழ வேண்டிய சிந்தனைகள் கொண்ட 100 மரபுக் கவிதைகள் இடம்பெற்றுள்ள நூல். மொழி, இனம், நாடு, மாந்தநேயச் சிந்தனைகளைத் தொலைநோக்கு உணர்வுடன் படைத்துள்ளார்.

☆ **யார்தான் கவிஞர்:** கலைவளர்மணி நல்லுசாமி, ரூ.100/-

எவ்வித வரையறையும் இல்லாமல் எழுதுவதெல்லாம் கவிதை என நினைப்போரை நெறிப்படுத்தும் நூல். கவிஞர்கள் என்போர் கற்க வேண்டிய நூல்.

☆ **உணர்வும் உயிரும் தமிழே!:** ஞா. சிவகாமி, ரூ.100/-

சமுதாய அக்கறையுடன், மனிதநேயச் சிந்தனைகளை விதைத்துள்ள 60 கவிதைகளின் தொகுப்பு.

**மேற்கண்ட இரு நூல்களும் வெளியீடு:** முல்லை பதிப்பகம், 323/10, கதிரவன் காலனி, அண்ணா நகர் மேற்கு, சென்னை - 600 040, பேச: 98403 58301.

☆ **ஒளிரும் கவிதைகள் மிளிரும் வரலாறு:** பட்டயக் கணக்காயர் சொ. பாசுகரன், ரூ.300/-

அரிய தகவல்கள், நிகழ்வுகள், வரலாறுகள் உள்ளடக்கிய கவிதைப் பெட்டகம்.

☆ **சிறப்புக் கடிதங்கள்:** பட்டயக் கணக்காயர் சொ. பாசுகரன், ரூ.200/-

சமுதாய அக்கறையும், தமிழ்ப் பற்றும் கொண்ட இவர், தவறு எங்கே நடந்தாலும் அதை உரியவர்களுக்குச் சுட்டிக்காட்டி எழுதிய கடிதங்களின் தொகுப்பு. படைப்புலகில் இது ஒரு புதிய முயற்சி.

**மேற்கண்ட இரு நூல்களும் வெளியீடு:** வசந்தா பதிப்பகம், 26, குறுக்குத் தெரு, சோசபு காலனி, ஆதம்பாக்கம், சென்னை - 600 088.

---

## பாராட்டுகிறோம்!

**க**லைமாமணி விக்ரமனின் 96ஆம் பிறந்தநாள் மற்றும் இலக்கிய பீடம் மாத இதழின் 28ஆவது ஆண்டு தொடக்க விழாவில் (6.4.2024) **பேராசிரியர் கஸ்தூரிராசா** அவர்களுக்கு மாம்பலம் சந்திரசேகர் - இலக்கிய பீடம் இணைந்து வழங்கும் 'விக்கிரமன் விருது' வழங்கப் பெற்றது. விருது அளித்தோரையும் விருது பெற்றோரையும் வாழ்த்தி மகிழ்கிறோம்.



பேரா. கஸ்தூரிராசா முகம் இதழுக்கு ரூ.1000/- நன்கொடை வழங்கினார்.

---

**முகம் இதழுக்குத் தொகை அனுப்ப:**

MUGAM
Current Account No. 54002838494
IFS Code: SBIN0007625, State Bank of India,
K.K. Nagar Branch, Chennai - 600 078.

வங்கியில் பணம் செலுத்துவோர்
அஞ்சலட்டை அல்லது புலனத்தில் விவரம் தெரிவிக்கவும்
பேசி: 94442 64111

**(செவ்விலக்கியம்)**

# தலைவியின் தவிப்பு!

– மு. வெங்கடேச பாரதி
99651 33874



**தோழி:** அன்புத் தலைவியே!
அவர் வரவில்லையே என்று
ஆத்திரம் வரலாமா?
அவசரப் படலாமா? - நின்மேனி
அழகு கெடலாமா?

இனிய தலைவரை இழந்துவிடலாமா?
சொல்வாயடி!

***தலைவி:*** நிழலாய் தொடரும் நிலா நிகர்த்தவளே!
நெஞ்சில் நிறைந்தவளே!

பிரிவென்னும் பெருநெருப்புப் பிழம்பு வாட்டத் தொடங்கிவிட்டதே! 'இயல்பு தானே' என்பாய்! இளவேனிலாகிய வசந்தகால வனப்பு வந்து விட்டதே!

வற்றிய நிலையில் முற்றிய இலைகள் முற்றும் உதிர்ந்தன. புதிய கிளைகள் வேறு துளிர்களோடு பொலிகின்றனவே. மாமரங்களெல்லாம் பூ மரங்களாயினவே! குயில்களெல்லாம் கூவத் தொடங்கினவே! பறவைகளில் பூங்குயில் பவித்திரமானது. பாடும் அதன் குரல் பனிமலர்த் தேனது என்பதுபோல் தனித்தவர்க்கு இன்னலாம், ஏனது?

கலைவல்ல யாழ்ப்பாணன் கைதடவி மருத யாழில் புறப்பட்டு வரும் பாலைப்பண் ஓசைப் பக்கம் பாணன் இல்லை. வண்ண மலரில் வண்டின் கூட்டம். அவ்வோசையும் தனித்திருக்கும் ஆயிழையருக்கு அல்லலோசை அல்லவா?

மேலும், குளிர்ந்த தெளிந்த குறுசிறு நீர்நிலைகள்; அவற்றின் பக்கத்தில் பூந்தாது உதிர்ந்து கொண்டிருக்கும் பொலிவுமிக்க மணல் மேடுகள். அவை இளங்காதலர் மேன்மை மிகுந்த வீட்டையும் மறந்து இன்புற்று அமர்ந்து பேசி மகிழ்வதைக் காணும். பிரிந்தவருக்கு பெருந்துயரன்றோ?

என்னிலைமை என்ன சொல்வேன். அணிவிக்கும்போது சிரமம் தந்தது அழகிய வளையல்கள்! அந்தக் கைவளை தாமே கழன்று விழுகின்றன.

பொன் பொருள் காசுபணம்
போகும் திரும்பி வரும்!
இன்பநலம் இளமைவளம்
இழந்தபின் பாலைவனம்!

என்னைத் தனிமையாக்கி இன்னல் தின்ன வைத்துப் பொன்னைப் பெரிதென்று போய்விட்ட தலைவனிடம் சொல்வோம். நிலையைச் சொல்வோம். வெறுப்பைக் காட்டி வருவோம். புழுவாயத் துடிக்க வேண்டாம். வருவாய் தோழி!

இந்தச் சொற்சுவை இனிக்கும் அற்புதப் பாடலை ஆக்கிய புலவர் - தங்கால் பொற்சொல்லனார்.

திணை: பாலை, அகநானுறு நித்திலக்கோவை 355ஆவது பாடல்.

மாவும் வண்டளிர் ஈன்றன குயிலும்
இன்றீம் பல்குரற் கொம்பர் நுவலும்
மூதிலை யொழித்த போதவிழ் பெருஞ்சினை
வல்லோன் தைவரும் வள்ளுயிர்ப் பாலை
நரம்பார்த் தன்ன வண்டினம் முரலுந்
துணிகயந் துன்னிய தூமணல் எக்கர்த்
தாதுகு தண்பொழில் அல்கிக் காதலர்
செழுமனை மறக்குஞ் செல்வி வேனில்
தானே வந்தன்று ஆயின் ஆனது
இலங்குவளை நெகிழ்ந்த எவ்வங் காட்டிப்
புலந்தனம் வருகம் சென்மோ தோழி
யாமே எமியம் ஆக நீயே
பொன்னயந் தருளிலை யாகி
இன்னை யாகுதல் ஒத்தன்றால் எனவே!

புலத்தல் - வெறுத்தல்
வள்ளுயிர்ப் பாலே - இனிமையான இசைக்கும் பாலைப்பண்
பொன்நயந்து - பொன்னை விரும்பி
எமியாக - தனிமையாக

# சிறுவர் பகுதி



**சி**றுவர்க்கான திறனறி போட்டி என்பது சிறுவர்களின் அறிவாற்றலை வளர்த்துக் கொள்வதற்காக ஏற்படுத்தப்பட்ட போட்டி. சிறுவர்கள் பெயரில் பெரியவர்கள் விடை எழுதி அனுப்புவது சிறுவர்களை அறியாமையில் வைத்திருப்பதற்குச் சமம்.

எனவே, சம்பந்தப்பட்ட சிறுவர் தம் கைப்பட எழுதிய விடைத்தாளில் பெற்றோர் கையொப்பமிட்டு, சிறுவர் படிக்கும் வகுப்பு, பயிலும் பள்ளி, பரிசுத்தொகை அனுப்புவதற் குரிய கைபேசி எண் ஆகியவற்றைத் தவறாமல் குறிப்பிட்டு அனுப்பினால் மட்டுமே போட்டியில் பங்கேற்க இயலும்.

## இம்மாதத்திற்கான திறனறி போட்டி:

**தமிழோடு விளையாடு:**

*சிதறிக் கிடக்கும் சொற்களைக் கோத்து வாக்கியம் அமைக்கவும்.*

1. படிப்பு, கனிவு, காலை, பின்பு, கொடுக்கும், பாட்டு, நல்ல, எழுந்தவுடன்.

2. எழுபவன், நட்டத்தோடு, உட்காருவான், கோபத்தோடு.

3. கிளம்பினான், காலைக்கடன்களை, அவன், பள்ளிக்குக், முடித்துக் கொண்டு.

4. சூரியனை, 365, சுற்றிவர, நாட்கள், பூமி, ஆகும், ஒருமுறை

5. 24, பூமி, சுற்றிக், நேரம், தன்னைத், ஒருமுறை, ஆகும், கொள்ள, தானே, மணி.

- பேரா. **சு.வீழிநாதன்,** சீர்காழி

காழி முத்தமிழ் முற்றமும் முகம் இதழும் இணைந்து நடத்தும் சிறுவர்க்கான திறனறி போட்டி!

வழக்கம்போல் மூன்று பரிசுகள் உண்டு. விடை 15ஆம் தேதிக்குள் வரவேண்டும். பரிசுத் தொகை அவரவர் செல்பேசிக்கு அனுப்பி வைக்கப்படும்.

(சிறுவர் பாடல்)

# வான்மழையே வா! வா!

(மணமகளே! மருமகளே! வா! வா! என்ற திரைப்பாடல் மெட்டு)

வான்மழையே! வான்மழையே! வா! வா! - முகம்
வாடும்பயிர்ச் சோகம்மாற வா! வா!
தேன்மழையே! தேன்மழையே! வா! வா! - அகம்
தேடும்உயிர்த் தாகம்தீர வா! வா!
வான்மழையே.....

கூன்பிறையை மேகங்களும் குவிந்துமூட வா - அனல்
கொதிக்கும்கதி ரோனும்இருள் குகையைத்தேட வா!
மான்மருகும் கானலதும் மறைந்துஓட வா - வன
மயிலும்எழில் தோகைவிரித்து மகிழ்ந்துஆட வா!
வான்மழையே...

கான்நதிகள் நீர்நிறைந்து கழனிபாய வா - திரை
கடலலைகள் மேலெழுந்து கரைகள்தோய வா!
மீன், தவளை ஏரிகளில் மிதந்துமேய வா - பெரும்
மின்னலிடி ஆரவாரம் மிகுந்துபேய வா!
வான்மழையே....

ஊன்உருகும் ஏருழவர் உவகைபூண வா - பசி
ஒழித்துவரும் ஏர்த்தொழிலும் உயர்வுகாண வா!
வீண்இயற்கைப் பேரிடர்கள் விலக்கிப்பேண வா - விழி
விரித்துவர வேற்றுவாழ்த்தும் விருப்பம்தோண வா!
வான்மழையே....

**– தளவை இளங்குமரன்**
99764 40889



# ஆழ்ச்சியை வெல்வோம்!

- முனைவர் இளமாறன்



**தி**ராவிடர் என்பதும் தமிழர் என்பதும் ஓரினத்தைக் குறிக்கும் சொல். இந்தியா முழுவதும் வாழ்ந்திருந்த தமிழர் பேசிய தமிழ்மொழி, ஆரியரின் வருகைக்குப் பின் சிதைவுற்றுப் பல மொழிகளாகப் பிரிந்துள்ளது. 'தென்னிந்திய மொழிகளில் மிகப் பண்பட்ட மொழியான தமிழ் மொழி, இந்தியாவில் உள்ள எல்லா மொழிகளுக்கும் மூலமாக இருந்தது' என்பார் டெய்லர் (Tailor). "தமிழ்' என்னும் சொல்லின் திரிபே 'திராவிட' என்னும் வடமொழிச் சொல்லாகும்" என்பார் ஸ்டென் கொனொவ் (Stenkonow) என்னும் அறிஞர். இதே கருத்தை டாக்டர் கிரியர்சன் அவர்களும் முன் வைக்கிறார்.

'த்ர்' என்னும் வேர்ச் சொல்லோடு 'விட்' எனும் விகுதி சேர்ந்து 'த்ராவிட்' என்னும் சொல்லாக அமைந்திருக்கிறது. 'இழிந்தவர்கள்', 'துரத்து' என்னும் பொருள்களில் இச்சொல் ஆளப் பட்டிருக்க வேண்டும் என்பார் கால்டுவெல். 'திராவிடர்' என்னும் சொல், தென்னிந்திய மக்கள் அனைவரையும் சுட்டுகின்ற இனப் பொதுப்பெயராகக் கொள்ளப் பட்டிருக்கிறது என்று 'தென்னிந் தியாவின் முந்தைய வரலாறு' என்னும் நூலில் வி.ஆர்.இராமச் சந்திர தீட்சிதர் குறிப்பிட்டுள்ளார்.

ஆக, 'தமிழ்' என்னும் சொல்லே 'திராவிட' என்னும் சொல்லாகத் திரிக்கப்பட்டு அம்மொழியைப் பேசுவோர் திராவிடர் என்று ஆக்கப் பட்டுள்ளனர். 'மனுஸ்மிருதி' சாதி மறுப்பவர்களை திராவிடர்கள் என்று சொல்கிறது. கி.பி.4ஆம் நூற்றாண்டில் சமணர்கள் 'திராவிடப் பள்ளி' நடத்தியுள்ளனர். கி.பி.7ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவராகக் கருதப்படும் வடமொழியாளரான குமரில பட்டர் என்பார் 'திராவிடர்' என்னும் சொல்லை முதன்முதலில் பயன் படுத்தியுள்ளார்.

பதிகங்கள்தோறும் தம்மைத் 'தமிழ்ஞான சம்பந்தன்' என்று கூறிக்கொண்ட ஆரிய மரபினரான திருஞானசம்பந்தரை சங்கராச்சாரியார் 'திராவிட சிசு' என்று கூறியது, அவர் தமிழை முன்னிறுத்தினார் என்பதற்காகத் தான். 'சமணர்கள் தமிழைத்

தவிர்த்தவர்கள், எனவே அவர்களை அணுகாதீர்' என்று ஞானசம்பந்தன் பாடியதும், 'ஆரியன் கண்டாய், தமிழன் கண்டாய்' என்று நாவுக்கரசர் பாடியதும் காலப்போக்கில் கணக்கிலி யாகிவிட்டது.

'நாலாயிர திவ்விய பிரபந்தம்' பாடிய பன்னிரு ஆழ்வார்களும் தமிழைத் 'தமிழ்' என்றே குறிப்பிட்டுள்ளனர். ஆனால், நம்மாழ்வார் பாடிய 'கோவில் திருவாய்மொழிப் பதிகத்'திற்குப் பாயிரம் இயற்றிய நாதமுனிகள், நம்மாழ்வார் பாசுரங் களைத் 'த்ராவிட வேதஸாகரம்' என்று குறிப்பிடுகின்றார். பிற்கால வைணவர்கள் 'திராவிடம்' என்னும் சொல்லை வைத்தே 'திராவிட வேதம்', 'த்ராவிட ஸம்ஹதா', 'த்ராவிட நிஷாத் ஸங்கதி', 'த்ராவிடோப நிஷத்ஸாரம்', 'த்ராவிடோப நித் தார்ப்பர்ய ரத்னாவளி' எனத் தொடர்கள் அமைத்தனர். தமிழில் வில்லி புத்தூரார் எழுதிய 'பாரதம்' கூட, 'திராவிட மகாபாரதம்' என்ற பெயரால் பிற்காலத்தில் புத்தகமாக வந்தது.

திராவிட மொழிக் குடும்பத்தின் மூத்தமொழி 'தமிழ்' என்று கால்டுவெல் குறிப்பிடுவது கூர்ந்து நோக்கத் தக்கது. தமிழிலிருந்து பிரிந்த தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளு, குடகு, மைதிலி, கோத, படக, நாயகி போன்ற மொழிகள் 'தமிழ்மொழிக் குடும்பத்திலிருந்து பிரிந்தவை' என்று கூறாததற்குக் காரணம், அன்றைய சூழலில் திராவிடம் என்பதும் தமிழ் என்பதும் ஒன்றாகக் கருதப்பட்டதேயாகும்.

கால்டுவெல்லின் காலம் கி.பி.1814 முதல் 1891 வரை. 1880களில் வெளிவந்த இதழ்களில், குறிப்பாக 1883இல் வெளிவந்த 'தத்துவ விவேசினி' போன்ற இதழ்களில் திராவிடம் என்னும் சொல்லே தமிழுக்குரியதாகக் கொள்ளப்பட்டிருக்கிறது. 'ஒரு பைசா தமிழன்' என்ற இதழை நடத்திய அயோத்திதாசப் பண்டிதர் 'திராவிடப் பாண்டியன்' என்னும் இதழையும் நடத்தியுள்ளார். அவரின் மைத்துனர் இரட்டைமலை சீனிவாசன் 1892இல் 'திராவிட மகாஜன சபை' எனும் அமைப்பை நடத்தியுள்ளார். நீதிக் கட்சியின் முன்னோடியான நடேசனார் அவர்களால் 1912இல் 'திராவிடர் சங்கம்', 'திராவிடர் இல்லம்' நடத்தப் பட்டிருக்கிறது.

மனோன்மணியம் சுந்தரனார் கவிதையில் தமிழைக் குறிக்கத் 'திராவிடம்' என்னும் சொல் ஆளப் பெற்றிருக்கிறது. மாமல்லபுரம் கடற்கரைச் சிற்பக் கோவில்களில் 'திராவிட பாணியில் செதுக்கப்பட்டது' என்னும் சொற்கள் இருக்கின்றன. தாகூரின் தேசிய கீதத்தில் 'திராவிட உத்கல வங்கா' என்ற சொற்கள் இருக்கின்றன. எனவே, திராவிடம் என்னும் சொல், தமிழ் மொழியையும், இனத்தை யும் குறிப்பதாகவே பயன்படுத்தப் பட்டிருக்கிறது என்று துணிந்து கூறலாம்.

இன்றைய சூழலில், 'திராவிடம்' என்பதும் 'திராவிடர்' என்பதும் தமிழருக்கு எதிர் நிலையில் வைத்துப் பார்க்கப் படுகிறது. தமிழ்நாட்டில் தமிழரல் லாத பிறமொழியாளர், தமிழுக்கும் தமிழருக்கும் எதிரானவர்களாக, அல்லது தமிழரின் உரிமைகளுக்கு உதவாதவர்களாக, தமிழ்மொழி, தமிழ்இன வளர்ச்சிக்குத் தடையாள ராகக் கருதப்படுகின்றனர். இதில் உண்மையும் இருக்கிறது.

'தமிழர்கள் மட்டும்தான் தம்மைத் திராவிடர் என்று கூறிக் கொள்கிறார்கள்; பிற தென்னிந்திய மொழியாளர்கள் தங்களைத் 'திராவிடர்' என்று கூறுவதில்லை; மொழி அடிப்படையில் தெலுங்கர், கன்னடர், மலையாளி என்றுதானே கூறுகின்றனர்' என்ற கருத்து நிலவுகிறது. 'திராவிடம் என்பது தமிழ் மொழியைக் குறிக்கும் சொல்' என்ற வரலாறு அறியாத வர்களின் கூற்று இது.

கருத்தை மூடிக்கொண்டு எல்லாவற்றையும் எதிர்க்கக் கூடாது. குறிப்பாக, தமிழருக்குத் தன்மானத்தையும் விழிப்புணர் வையும் ஊட்டிய தந்தை பெரியாரைக் கன்னடர் என்று அடையாளப்படுத்தி, அவருடைய தன்னலமற்ற உழைப்பைக் கொச்சைப்படுத்தி, அவருக்கு எதிராகத் தமிழர்களைக் கொம்பு சீவி விடுவதாகும். 'தமிழ்நாடு தமிழருக்கே' என்று 1938இல் முதன்முதலில் குரல்கொடுத்த பெரியாரை, அவர் 1944இல் 'தென்னிந்திய நல உரிமைச் சங்க'மாக இருந்த நீதிக் கட்சியின் பெயரைத் 'திராவிடர் கழகம்' என மாற்றினார் என்பதற்காக வெறுப் பதும், தூற்றுவதும் அறியாமையின் வெளிப்பாடாகவே கருத வேண்டி யிருக்கிறது. சில தன்னலக்காரர்கள், கடவுள் வழிபாட்டை விட முடியாதவர்கள், பெரியாரின் பகுத்தறிவுக் கொள்கைக்கு எதிரானவர்கள், தனிப்பட்ட விருப்பு வெறுப்பின் காரணமாகப் பெரியாரைத் தூற்றுவதைத் தொழிலாகக் கொண்டுள்ளனர்.

பெரியார், 'தமிழர் கழகம்' எனப் பெயரிடாமல், 'திராவிடர் கழகம்' எனப் பெயரிட்டதற்குக் குறை சொல்வோர், அதே 'திராவிட' என்னும் முன்னொட்டைப் பயன்படுத்தி அவருக்கு முன்னர் 'ஆதி திராவிட ஜனசபை கட்சி' என்று பெயரிட்ட அயோத்திதாசப் பண்டிதரையும், 'திராவிட மகாஜன சபை' கண்ட இரட்டைமலை சீனிவாசனாரையும் ஏற்றுக் கொள்கின்றனரா? இல்லையா? என்பது கேள்விக்குறியாகவே இருக்கிறது. பெரியாருக்கு முன்னரே கடவுள் மறுப்புக் கொள்கை இம்மண்ணில் முளை விட்டிருக்கிறது.

திராவிடர்களின் ஆட்சியை ஒழித்துக் கட்டுவதே குறிக்கோ ளாகக் கொண்டு களமிரங்கியுள்ளது ஒரு கட்சி. அதற்கு ஆதரவாகத் தெளிவில்லாத சில தமிழர்களும் ஒத்திசைக்கின்றனர். திராவிடர் ஆட்சி ஒழிப்பு என்றால் தமிழர்

களை ஒழிப்பது என்பதுதானே பொருள். திராவிட ஆட்சியை ஒழிக்க வருபவர்கள் யார்? தமிழர்களா? பார்ப்பனர் ஆட்சியைக் கொண்டு வருவதுதானே இவர்களின் நோக்கம்! இந்நிலையில் தமிழர்கள் வேறு, திராவிடர்கள் வேறு என்று நமக்குள்ளே பிரிவினையை ஏற்படுத்துவது, பொது எதிரிகளுக்கு வாய்க்கால் வெட்டிக் கொடுப்பதாகும். அதிலும் எதிரிகளுக்குச் சிம்ம சொப்பனமாக இருக்கும் பெரியாரைத் தவிர்த்து தமிழ்த் தேசியத்தை முன்னெடுக்க நினைப்பது செயலாற்றலாகாது.

சங்க காலத்திலிருந்தே பலமொழிகளைப் பேசுவோர் வாழ்ந்த நாடு தமிழகம். 'மொழிபல பெருகிய பழதீர் தேயம்' என்று பட்டினப்பாலை கூறுகிறது. 'மொழிபெயர் தேஎத்தோர் ஒழியா விளக்கமும்' என்கிறது சிலப்பதிகாரம். தமிழ் மண்ணை முகலாயர்கள், மராட்டியர்கள், நாயக்கர்கள் ஆண்டிருக்கின்றனர். மொழிவழி மாநிலம் 1956இல் அமைவதற்கு முன்பிருந்தே பிறமொழியாளர் இம்மண்ணில் வாழ்ந்து வருகின்றனர். இவர்களையெல்லாம் புறக்கணித்துவிட்டு தமிழ்த் தேசியத்தை நாம் கட்டமைத்துவிட முடியாது. இதை உணர்ந்துதான் பேரறிஞர் அண்ணா, திராவிட நாட்டுக் கொள்கையை முன்னெடுத்தார்; ஆட்சியையும் பிடித்தார். அதே வேளையில் தமிழர்களுக்கு எதிராகச் செயல்படும் பிறமொழியாளரை எதிர்க்க வேண்டிய கட்டாயமும் நமக்கு இருக்கிறது.

பொருளாதார நிலையிலும், வணிக நிலையிலும் தமிழன் முன்னேறுவதற்கான அடிப்படைகளில் முதலில் கவனம் செலுத்த வேண்டும். தமிழர்கள் தங்களை நிலைநிறுத்திக் கொண்டால், பிறமொழியாளர் அனைவரும் தமிழர்களுக்குக் கட்டுப்பட்டவர்களாகி விடுவர்; தமிழ்த் தேசியத்திற்குள் அடக்கமாகி விடுவர். அதுவரை நமக்கான பொது எதிரியின் மீது கவனம் தேவை. அவர்களும் தங்களைத் 'தமிழர்கள்' என்று கூறிக் கொள்கின்றனர். உண்மையில் அவர்கள் தமிழர்களா?

தமிழ்த்தேசியம்தான் தமிழர்களின் இலக்கு. இதில் இருவேறு கருத்துகளுக்கு இடமில்லை. உண்மையான தமிழ்த் தேசியம் மலர வேண்டுமானால், நம்மைப் பிரித்தாள நினைக்கும் இனப்பகையை அடையாளங்கண்டு, அவர்களுக்கு இடங்கொடுக்காமல் தமிழே திராவிடம், திராவிடமே தமிழ் என்பதை உணர்ந்து, தமிழர்களுக்குள் பிரிவினை ஏற்படுவதைத் தவிர்க்க வேண்டும். இனப்பகை உள்ளே நுழைந்து விடாமல் தடுக்க வேண்டும்.



**த**மிழ்நாடு பத்திரிகை மற்றும் ஊடகப் பணியாளர் சங்கத்தின் சார்பில் 12.04.24 அன்று தாம்பரத்தில் முதுபெரும் தமிழறிஞர்களுக்குப் பாராட்டு விழா மேனாள் சட்டப்பேரவைத் தலைவர் முனுஆதி அறக்கட்டளைத் தலைவர் ஆதிமாறன் அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

விழாவில் மூத்த தமிழறிஞர்கள் மட்டுமன்றி அவர்களின் துணைவியரும் பாராட்டிச் சிறப்பிக்கப் பெற்றனர்.

புலவர் தங்க.சங்கரபாண்டியன் - மல்லிகா, முனைவர் இளமாறன் - சாந்தி, முனைவர் குமரிச்செழியன் - இந்திரா தேவி, திரு.மு.நெடுமாறன் - மீனாட்சி, கவிஞர் மு.செல்வராசன் - ஜெயலட்சுமி, தொல்லியலறிஞர் ஸ்ரீதரன் - மைதிலி, திரு.சு.வெங்கட்ராமன் - உமா, திரு.பா. மோகன் - இந்திராணி, திரு.ப.கண்ணையன் - இலட்சுமி, திரு. ஏ. சுப்பிரமணியம் - பரிமளா, திரு. க. கிருஷ்ணகுமார் - வளர்மதி ஆகிய இணையர் பாராட்டிப் பரிசளிக்கப் பெற்றனர்.

இதழாளர் ச. இசைக்குமணி உட்பட சங்கப் பொறுப்பாளர்கள் முன்னிலையில், திரு.டி.எம்.ஜி. மார்க்ஸ் ஆனந்த், மேனாள் தலைவர் கவிஞர் தாமரைப்பூவண்ணன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். புலவர் தங்க. சங்கரபாண்டியன் தமிழறிஞர்களைச் சிறப்பாகப் அறிமுகப்படுத்தினார். சங்கப் பொதுச்செயலாளர் முனைவர் பா. கோபாலகிருஷ்ணன் விழாவைச் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தார். அவருடைய பிறந்தநாள் விழாவும் கொண்டாடப் பெற்றது.



கருத்துப்படம்
அரசு அறிக்கைகள்
------- இந்தத் திட்டத் திற்கு இத்தனை கோடி பணம் ஒதுக்கீடு!...
.... அந்தத் திட்டத் திற்கு அத்தனை கோடி பணம் ஒதுக்கீடு! கோடி கோடியாய் ஒதுக்கீடு!...
ஐயா! பார்த்துக் குதியுங்க!... சாலை, இண்டும் குழியுமா இருக்கு... குப்புற விழுந்திடப் போறீங்க!
ஐயா! மழைக் காலத்துல மழைத் தண்ணீர் தேங்குது! கோடை காலத்துல குப்பைகள் தேங்குது! முதலில் சாலை-களைச் சீரமைக்க முயற்சியுங்கள்!

# வடமாநிலத்தவரால் தேர்தல் முடிவைத் தீர்மானிக்க முடியும்!

**செ**ன்னை சவுக்கார்ப் பேட்டையில் தமிழ்நாடு அரசு உதவிபெறும் பள்ளிகள் 28க்கும் மேல் உள்ளன. அந்தப் பள்ளிகள் வடநாட்டைச் சேர்ந்த மாணவர்களுக்கு மட்டுமே உள்ளதல்ல. அந்த வட்டாரத்தில் உள்ள அனைத்துத் தரப்பு மாணவர்களுக்குமானது. ஆனால், நடைமுறையில், அப்பள்ளிகள் முழுக்க முழுக்க வடநாட்டுக்காரர்களுக்கு மட்டுமே இயங்கும் தனியார் பள்ளிகள்போல் இயங்குகின்றன என்பது அதிர்ச்சியானதாகும்.

இப்பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களும் அலுவலகப் பணியாளர்களும் பெரும்பாலும் வடநாட்டினர். 20 ஆண்டுகளுக்கு முன் பணியமர்த்தப்பட்ட ஓரிரு தமிழக ஆசிரியர்கள் மட்டுமே அங்கு உள்ளனர்.

அங்கே எந்தப் பள்ளியிலும் தமிழ் பயிற்றுவிப்பது இல்லை. தமிழ் மாணவர்களைச் சேர்ப்பதில்லை. தமிழ் மாணவர்களைச் சேர்க்கச் சென்றால் அவர்கள் சொல்வது, அவர்களைச் சேர்த்தால் எங்கள் பள்ளியில் வீண் பிரச்சினைகள் ஏற்படும் என்பதாகும். மேலும் ஓரிரு ஆசிரியர்களைத் தமிழ்நாட்டிலிருந்து தேர்ந்தெடுத்தாலும் அவர்கள் பார்ப்பனர்களாக இருக்க வேண்டும் என்பது எழுதப்படாத நீதி. பார்ப்பனராக இருந்தாலும் அவர்களுக்கு இந்தி தெரிந்திருக்க வேண்டும்.

இங்கு மட்டும் ஆசிரியர் பணியிடங்கள் உடனுக்குடன் நிரப்பப்பட்டு ஊதியம் வழங்கப் படுகிறது. சென்னை மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் அலுவலகத்திலிருந்து இப்பள்ளிகளுக்குச் சிறப்புச் சலுகைகள் வழங்கப் படுகின்றன. இவை அனைத்தும் ஆர்.எஸ்.எஸ். பள்ளிகளாக இயங்கிக் கொண்டிருக்கின்றன.

சென்னையின் நடுப்பகுதியான சவுக்கார்ப்பேட்டையில் தமிழ் மொழிக்கும், தமிழ் மாணவர்களுக்கும் வஞ்சகம் செய்து கொண்டிருக்கும் இவ்வகையான பள்ளிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இப்பொழுது குஜராத்தில் மாணவர்கள் எண்ணிக்கை குறைவாக உள்ளதாகக் கூறி, தமிழ்வழிப் பள்ளிகளை மூட வேண்டும் என குஜராத் அரசு ஆணை பிறப்பித்துள்ளது. அந்தத் தமிழ்ப் பள்ளி, தங்கள் பள்ளியில் ஆங்கில வழியில் பயிற்றுவிக்க அனுமதி கேட்கிறது. ஆனால் அனுமதி அளிக்க குஜராத் அரசாங்கம் மறுக்கிறது.

ஆனால் இங்கே சவுக்கார்ப் பேட்டையில் உள்ள 28க்கும்

மேற்பட்ட பள்ளிகளில் ஆங்கில வழியில் வகுப்புகள் நடத்துவதற்குத் தமிழக அரசு கோடிக் கணக்கில் நிதி வழங்கிக் கொண்டிருக்கிறது.

தமிழிலேயே சொல்லித் தராத இந்தப் பள்ளிகளுக்குக் கோடிக்கணக்கில் நிதி உதவி அளிப்பது சரியா? இங்கு நிரப்பப் படாமல் இருக்கும் ஆசிரியர் பணியிடங்களுக்கு வெறும் இளங்கலை பட்டம் பெற்றவர்களை அழைத்து வந்து பணி அமர்த்தப் படுகிறது. அவர்கள் எந்த ஆசிரியர் பயிற்சிப் பட்டமும் பெறவில்லை. அவர்களுக்கு என இருக்கும் சிறப்பு அனுமதியின் பேரில் ஆசிரியப் பயிற்சியைப் பெற அவர்களை இங்கே பணியமர்த்தி ஊதியம் வாங்கிக் கொடுக்கிறார்கள்.

தமிழ்நாட்டில், அதுவும் தலைநகரமான சென்னையில், தமிழ் நாட்டவருக்கோ, அவர்களின் தாய்மொழியான தமிழுக்கோ சம்பந்தம் இல்லாமல் தனிக்காட்டு ராஜாவாக இந்தப் பள்ளிகள் தமிழ்நாடு அரசின் நிதியுதவி யோடு எப்படி நடக்க முடிகிறது என்பது ஆச்சரியப்பட வேண்டியது தான்.

கல்வித்துறை அதிகாரி களுக்கு இந்த விவரங்கள் எல்லாம் தெரியவே தெரியாதா? சவுக்கார்ப் பேட்டையில் வடநாட்டார் குடியிருப் புகள் அதிகம் இருக்கலாம். அதே அடிப்படையில் வடநாட்டு மாணவர் கள் அதிகம் சேர்க்கப்படுவதைப் புரிந்துகொள்ள முடிகிறது. அதற்காகத் தமிழ் மாணவர்களைச் சேர்ப்பதில்லை என்பது எப்படிச் சரியாகும்?

ஆசிரியர்களும் பெரும் பாலும் வடநாட்டவராகவும், பார்ப்பனர்களாகவும் ஆதிக்கம் செலுத்துவதை எப்படி ஏற்றுக் கொள்ள முடியும். பொதுவாக சென்னையில் மட்டும் வணிகத்தில் ஆதிக்கம் செய்து கொண்டிருந்த வட மாநிலத்தவர்கள் இப்போது தமிழ் நாட்டின் கிராமப்புரங்கள்வரை தங்களின் வணிக சாம்ராஜ்ஜி யத்தை நிறுவிவிட்டனர்.

ஒரு காலத்தில் வடநாட்டவர் வசிக்கும் பகுதி என்று சவுக்கார் பேட்டையைச் சொல்வதுண்டு. இப்போது அப்படியில்லை. சென்னையில் அனைத்துப் பகுதி களிலும் அவர்களின் குடியிருப்புகள் அடுக்குமாடிக் கட்டடங்கள் உள்ளன. அத்தகைய குடியிருப்புகளில் வட நாட்டைச் சேர்ந்தவர்களைத் தவிர தமிழ் நாட்டுக்காரர்களுக்கு இடம் அளிப்பதில்லை. வெளிப்படை யாகவே மறுக்கவும் செய்கிறார்கள். இந்தப் போக்கு நீடிக்குமானால் தமிழ்நாட்டு மக்களுக்குப் பெரும் அச்சுறுத்தலே இருக்கும். அவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும்போது, தேர்தலில் கூட அவர்களின் வாக்குகள் தேர்தல் முடிவைத் தீர்மானிப்பதாக அமைந்துவிடும்

.

**- சிவகுமார்,**
94459 53399

# வாழ்வின் கொடுமுடி தொடுவோம்!

– வெற்றிப்பேரொளி
94422 75418

நானெனும் பொய்யில் நாள்கள் நடத்தி வாழ்வும் கழிந்ததடி – நறுந்
தேனெனும் பொய்யில் சொற்கள் நனைந்து நெஞ்சில் பிழிந்ததடி!
யானெனும் மூர்க்கம் பெருகிப் பெருகி பேருரு கண்டதடி – அந்த
வானெனும் வெளியும் அதனின் முன்னே குறுக்கம் கொண்டதடி!

கோதெனும் அழுக்கும் கூடி வளர்ந்து மலையாய் ஆனதடி – பொய்
ஈதெனும் உண்மை இருளில் மறைந்து கலைந்தே போனதடி!
தூதெனும் வருகை தந்தன வெல்லாம் துன்ப மூட்டையடி – பல
சூதெனும் செயலால் இடிந்தே போனது மனமெனும் கோட்டையடி!

நாளெனும் ஒன்றில் நன்மை புரிந்திட நினைவும் மறந்ததடி – கூர்
வாளெனும் நாளால் வாணாள் அறுந்து வெற்றாய் பறந்ததடி!
வேளெனும் இருக்கை வீடும் ஓர்நாள் அதனைத் தெரிந்திடடி – பெரிய
ஆளெனும் பெருமை கூட வராது புத்தி தெளிந்ததடி!

திருவெனும் செல்வம் சேர்த்துக் காத்தலில் வருமே தொல்லையடி – இந்த
உருவெனும் உடலும் சாயும் நேரம் காப்பும் இல்லையடி!
கருவெனும் போதில் தாயின் வயிற்றில் கொண்டவை கோடியடி – அந்தத்
தருவெனும் கற்பகம் தந்ததைப் பெறவே செல்வோம் தேடியடி!

விதியெனும் மதியெனும் மயக்கிடும் எண்ணமும் மனத்தினில் களைந்திடடி – ஒரு
நதியெனும் போக்கினில் உன்னை நடத்தி நன்மைகள் விளைத்திடடி!
உதியெனும் கட்டளைக் காகக் கதிரும் உதிப்ப தில்லையடி – நீயே
கதியெனும் சினைவில் கடமையை யாற்று வெற்றியே எல்லையடி!


வானெனும் மேலே வில்லாய் வண்ணம் குழைப்போம் நேயமடி – இறுதி
கானெனும் படுக்கை காணும் முன்னே கழுவுவோம் பாவமடி!
நானெனும் பொய்யை உடைத்து நொறுக்கு பாரதி வழியிலடி – மனக்
கூனெனும் இழிவைத் துடைத்து நிமிர்த்து பாவலன் மொழியிலடி!

நாமெனும் எண்ணம் நெஞ்சினில் ஊன்றி வளர்ப்போம் உறவையடி – அட
தேமெனும் அன்பினில் சிறகுகள் முளைத்திடும் நாமும் பறவையடி!
போமெனும் ஆணை வருமுனம் நானெனும் பொய்யை விடுவமடி – எதிலும்
தாமெனும் முனைப்பைத் தொலைத்து வாழ்வின் கொடுமுடி தொடுவமடி!



சென்ற இதழ் தொடர்ச்சி:

# அறிவுச் சுரங்கம் அப்பாத்துரையார்



- முகம் மாமணி

26

## அவருடைய மரண சாசனம்போல் அமைந்த கட்டுரை!

கடந்த மூன்று ஆண்டுகளாகச் சனிக்கிழமைதோறும் பிற்பகல் 2 மணிக்கு அப்பாவைச் சந்தித்து அவர் சொல்வதையெல்லாம் எழுதிக் கொள்வது வழக்கம்.

1.4.89 அன்று அவரைச் சந்தித்துவிட்டு வந்த பிறகு, 2.4.89 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு இலக்கிய வட்டத்தின் 100ஆவது சிறப்புக் கூட்டத்தில் கலந்து கொள்ள நான் சென்று கொண்டிருந்தபோது, நெஞ்சுவலி ஏற்பட்டு மருத்துவ மனையில் சேர்ந்ததிலிருந்து 19.5.89 வரை படுக்கையில் ஓய்வு எடுத்துக் கொண்டிருந்ததால், அப்பாவுக்குத் தகவல் தெரிவித்துவிட்டு அவரைச் சந்திக்கச் செல்லாமல் இருந்தேன்.

இந்த 48 நாட்கள் அவரைச் சந்திக்காமல் நானும், என்னைச் சந்திக்காமல் அவரும் தவித்துப் போனோம்.

20.5.89 அன்று மாலை மூன்று மணிக்குப் பேருந்து நிறுத்தத்திற்கு வந்தேன், அவர் வீட்டிற்குச் செல்ல. கொடுமையான கோடையின் வெப்பத்தால் 10 நிமிடத்திற்குமேல் என்னால் காத்திருக்க முடியவில்லை. மயக்கம் வருவது போல் இருந்தது. ஆகவே வீட்டிற்குச் சென்றுவிட்டேன்.

மாலை அய்ந்து மணிக்கு வெயில் கொஞ்சம் தணிந்ததும், மீண்டும் புறப்பட்டு அப்பாவின் வீட்டிற்குச் சென்றேன்.

நான் இரும்புக் கதவைத் தள்ளிக்கொண்டு உள்ளே நுழைந்ததும், அம்மாவும் குழந்தைகளும் நான் மறுபிறவி எடுத்து வருவதாகக் கூறி மகிழ்ச்சியோடு வரவேற்றனர்.

'அய்யா...! என்று குரல் கொடுத்துக் கொண்டே அப்பாவின் அறைக்குள் நுழைந்ததும், என் கைகளைப் பரிவோடு பற்றிக் கொண்டு, 'இப்போ எப்படி இருக்கீங்க?' என்றார். 'பரவாயில்லை அய்யா! ஆனால் 60 நாட்கள்

கட்டாய ஓய்வில் படுக்கையிலேயே இருக்க வேண்டுமென்று டாக்டர் சொல்லியிருக்கிறார்.'

'உன்னைப் பார்க்காமல் அப்பா தவித்துப் போனாரப்பா! மாமணி... மாமணி... என்று சதா புலம்பல்தான்; கீழே விழுந்து நெற்றியில்கூட அடிபட்டுவிட்டது!' என்றார் அம்மா! அப்பா நெற்றி யைத் தடவிக் காட்டுகிறார். அதைப் பார்த்து நான் கலங்குகிறேன்.

'மாமணி, நல்லா ஓய்வு எடுத்துக்கங்க. அதிகம் பேசாதீங்க..' என்று எனக்கு அறிவுரை கூறினார்.

'அய்யா, உங்களுக்கு சிறுநீர் போகாமல் வயிறு, கால்களெல்லாம் வீங்கிப் போயிருந் ததே, இப்போ எப்படி இருக்கு?'

'இப்போ அந்தத் தொந்தரவு இல்லை. சிறுநீர் தாராளமாகப் போகிறது' என்று சொல்லிவிட்டு சிறிது நேரம் மௌனமாக இருந்தார். அதன் பிறகு அவர் சொன்ன தகவல்கள்தாம் சென்ற இதழில் 'தட்டுங்கள் திறக்கப்படும், கேளுங்கள் கொடுக்கப்படும்' என்ற தலைப்பில் வெளிவந்த கட்டுரை. அதுதான் அவருடைய மரண சாசனம்போல அமைந்து விட்டது.

**கடைசி சந்திப்பு**

20.5.89 அன்று சந்தித்து அப்பாவுடன் உரையாடியதுதான் கடைசி சந்திப்பாக இருக்கும் என்று நான் அப்போது நினைக்கவில்லை.

அந்தச் சந்திப்பில் அவர் சொன்ன கருத்துகளைப் படித்துப் பார்க்கும்போது, இதுதான் கடைசி என்பது போல ஒவ்வொரு சொற்றொடரும் சான்றாக என் முன் வந்து நிற்கின்றன.

26.5.89 காலை பத்தரை மணிக்குப் பக்கத்து வீட்டு தொலை பேசியில் யாரோ கூப்பிடுவதாகத் தகவல் வருகிறது. என் மூத்த மகள் பூங்கோதை எழுந்து ஓடுகிறாள்.

திரும்பி வந்து, 'அப்பா! பன்மொழிப்புலவர் அப்பாத்துரை காலமாகிவிட்டாராம்! அவர் மகள் செல்வி சொன்னாங்க!'

திடீரென்று மின்தடை ஏற்பட்டதும் வீடு இருளில் மூழ்கு வதுபோல் என் இதயம் இருளில் மூழ்குகிறது! ஒரு தவிப்பு; ஏக்கம்! என் பதின்மூன்றாவது வயதில் என்னைப் பெற்ற தந்தையை இழந்தபோது கூட இவ்வளவு தவிப்பு எனக்கு ஏற்பட்டதாக நினை வில்லை. இந்த 58 வயதில், அறிவுலகத் தந்தையை இழந்த தவிப்பு எனக்குப் பெரிதாகவே பட்டது. குடும்பத்திலுள்ள அனைவரும் எனக்கு ஆறுதல் கூறுகிறார்கள். எங்கே நான் உணர்ச்சி வயப்பட்டு மீண்டும் நெஞ்சு வலிக்கு ஆளாகி விடுவேனோ என்று அவர்கள் பயப்படுவது எனக்குத் தெரிகிறது.

நான் புறப்படத் தயாரா கிறேன்.

'ஏங்க, அவரைப் பார்க்கப் போறீங்களா....?' - மனைவி!

'அப்பா! வெயில் பயங்கரமா இருக்கே. நேற்று மாதிரி 107 டிகிரி இருக்கும் போலிருக்கே...!' - மூத்த மகள்.

'நான் போகலேன்னா, என் மனம் கேட்காது. போயிட்டு சீக்கிரம் வந்துடுறேன் என்று சொல்லிக் கொண்டே புறப்பட்டு, கலைஞர் கருணாநிதி நகரிலிருந்து தேனாம் பேட்டை வழியாகப் போகும் பேருந்துக்காகக் காத்திருந்தேன். சட்டைப் பையைத் தடவிப் பார்க்கிறேன். நெஞ்சு வலிக்குப் போட்டுக்கொள்ளும் மாத்திரை இருக்கிறதா என்று.

தேனாம்பேட்டையில் இறங்கித் திருவள்ளுவர் சாலை வழியாகச் சென்று அப்பாத்துரை தெருவுக்குத் திரும்பி நடக்கிறேன். தெரு வாசலில் எந்தச் சந்தடியும் இலலை; யாரும் இல்லை. நெஞ்சு ஏதோ ஒரு மாதிரியாக இருக்கிறது. உடனே ஒரு மாத்திரையை எடுத்து நாக்குக்கு அடியில் வைத்துக் கொள்கிறேன்.

தெரு வாசலைக் கடந்து உள்ளே நுழைகிறேன். அழுகைக் குரல் என்னை வரவேற்கிறது. கூடத்திற்குள் கட்டிலில் மாலை அணிவித்த கழுத்தோடு அப்பா கிடத்தப்பட்டிருக்கிறார். தலைமாட்டில் உட்கார்ந்து அழுது கொண்டிருந்த அம்மா என்னைப் பார்த்து, 'அப்பா... அய்யா போயிட்டாரே! அறிவுக்கடல் ஓய்ந்திருச்சே...!' என்று அழுகிறார்.

நான் அப்பாவின் மார்பைத் தொட்டு கை குவித்து வணங்கி நிற்கிறேன். சில நிமிடங்கள் என்னை அடக்கிக் கொண்டு வெளி வராண்டாவிற்கு வருகிறேன்.

தங்கை வெற்றிச் செல்வியும் அவர் கணவர் நந்தகுமாரும் என்னை உட்காரச் சொல்கின்றனர்.

'அண்ணா, உங்க உடம்பைப் பார்த்துக்கங்க, கொஞ்ச நேரம் இருந்துட்டுப் புறப்படுங்க. யார் யாருக்கெல்லாம் தகவல் தெரிவிக்கணும் என்பதை மட்டும் சொல்லுங்க.'

நான் சொல்வதைக் குறித்துக் கொள்ளத் தயாராக ஒரு குறிப்பேட்டை எடுத்துக்கொண்டார் குமார்.

'முதலில் கலைஞருக்குத் தகவல் தெரிவியுங்க. பிறகு, பேராசிரியருக்கு, வீரமணிக்கு, பொன்னடியானுக்குத் தெரிவி யுங்கள். அதன் பிறகு தொலைக் காட்சியில் தஞ்சைவாணனுக்கு, வானொலியில் சமுத்திரத்துக்கு, பிறகு முரசொலி, விடுதலை, மற்ற பத்திரிகைகளுக்கெல்லாம்....' என்று நான் சொல்லச் சொல்ல குறித்துக்

கொண்டார். ஒரு அம்மையார் தொலைபேசித் தகவல் புத்தகத்தைப் புரட்டி மேற்குறிப்பிட்டவர்களின் தொலைபேசி எண்களைக் குறித்துக் கொள்கிறார். அதைப் பார்த்துத் தெலைபேசி எண்களைச் சுழற்றுகிறார் தர்மராஜன்.

நான் மெல்ல எழுந்து செல்வியிடம் சென்றேன்.

'நல்லாதான்'ணா இருந்தார். மறுபடியும் சிறுநீர் போகாமல் வயிறு வீங்கிவிட்டது. உடனே தேவகி ஆஸ்பத்திரியிலே சேர்த்தோம். அங்கே டாக்டர்களெல்லாம் அப்பாவைப் புரிஞ்சிகிட்டு நல்லா கவனிச்சாங்க. டியூப் மூலம் சிறுநீரையெல்லாம் எடுத்திட்டாங்க. அங்க கூட உங்களை நினைத்துக் கிட்டு மாமணியை வரச் சொல்லுங்களேன், மாமணியைப் பார்க்கணுமேன்னாரு. நாளைக்கு சனிக் கிழமை, அவரே வருவாரப்பா, உங்களுக்கு ஒன்னும் இல்லே! நாளைக்கே கூட டிஸ்சார்ஜ் பண்ணாலும் பண்ணிடு வாங்க'ன்னு சொன்னேன்.'

வெள்ளிக்கிழமை விடியற் காலை நாலரை மணிக்குக்கூட நல்லா இருந்தாராம். மூத்திரப் பையைச் சுத்தம் செய்த அம்மா சொல்லுது. ஆறரை மணிக்கு நர்ஸ் வந்து பார்த்தபோது அப்பா தூங்கறாப்போலவே இருந்தாராம். கை வைச்சு பார்த்தப்போதான் அப்பாவின் உயிர் தூக்கத்திலேயே போயிருக்கும்னு டாக்டர்கிட்டே சொல்லியிருக்காங்க. டாக்டர் வந்து பார்த்துவிட்டு, தூக்கத்திலேயே மாரடைப்பு வந்து உயிர் பிரிஞ்சிட்டுதுன்னு சொன்னாரு!'

'இதுக்கு முன்னாலே எப்போதாவது அப்பாவுக்கு மாரடைப்பு வந்திருக்கா?'

'1973-ம் வருஷம் வந்ததாம்'

நான் சொல்லிக்கொண்டு கிளம்பும்போது கவிஞர் பெருஞ்சித்திரனார் வருகிறார். அவரோடு அறிமுகப் படுத்திக் கொண்டு உரையாட மனம் இருந்தும்; உடல்நிலை இடந் தராததால் மெல்ல நடந்து வெளியே வருகிறேன்.

அப்பாவுக்கு நிகரான ஓர் அறிவுக்கடலை இனி தமிழகத்தில் எப்போது சந்திக்கப்போகிறான் தமிழன்?

+++++++

வாசகர்களே!

அப்பா சொல்லச் சொல்ல எழுதி வைத்துள்ள குறிப்புகள் ஒரு கோப்பு நிறைய இருக்கின்றன

இனி, கோப்புகளிலிருந்து அப்பா பேசப்போவதை மாதந் தோறும் கேட்கலாம்.